வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 31.12.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 26 | பக்கங்கள் : 20




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# இராணுவத்தின் துணையுடன் ஆட்சியை நடத்தலாமென அரசு கனவு காண்கிறது!

## ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, டிசெம்பர் 31

“இராணுவத்தின் துணையுடன் ஆட்சியை நடத்திச் செல்லலாம் என்று அரசு கனவு காண்கின்றது. இராணுவத்தைக் கொண்டு வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை எப்படி உயர்த்த முடியும்?”, என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம். பி. கேள்வி எழுப்பியுள்ளார். 19



## நயினாதீவு வடக்கு பகுதியில் நேற்று மாலை மினி சூறாவளி!


### 6 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிப்பு!!

யாழ்ப்பாணம், டிசெ. 31

நயினாதீவு வடக்கு பகுதியில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி தாக்கத்தினால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- யாழ். மாவட்டத்தில் நேற்றுக் காலையிலிருந்து 19

## பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் வடக்கு மருத்துவமனைகள் முடங்கின!



யாழ்ப்பாணம், டிசெ. 31

சுகாதார தொழில்சங்க கூட்டமைப்புடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் மாகாண ரீதியாக நடத்தப்படும் தொழில்சங்க நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட வடக் 19

## இருக்கும் பிள்ளைகளை இல்லாமல் செய்வதற்கா இராணுவ மயமாக்கல்?

### காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் கேள்வி

கிளிநொச்சி, டிசெ. 31

“ஞானசார தேரர் இராணுவத்தை கொண்டு வந்து குவித்து, இருக்கின்ற பிள்ளைகளையும் இல்லா தாக்குவார்”, என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் 19

## வடக்கு, கிழக்கு மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு, கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு 2022 ஜனவரி 5ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வழமையான 19

**உங்கள் ஈழநாடு நாளிதழுடன் நாளை இலவச வர்ண கலண்டர். உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.**

## சீனாவுக்கு சகாவாக விடாமல் இலங்கைக்கு உதவி செய்யுங்கள்

### சு. சுவாமி இந்தியாவிடம் வலியுறுத்து

புதுடில்லி, டிசெ 31

இலங்கைக்கு இந்தியா பத்து பில்லியன் டொலர் கடன்களை வழங்குவதன் மூலம் சீனாவிற்கு ஒரு சகா கிடைப்பதை தடுக்கலாம் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

“இந்து சமுத்தி 19

## சீன வெளியுறவு அமைச்சர் ஜன. 8 இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ. 31

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி எதிர் வரும் ஜனவரி 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வருகிறார் என்று 19



## யாழ். சிறுமிகள் இருவர் உட்பட குளிக்கச் சென்ற மூவர் மாயம்!

கொழும்பு, டிசெ. 31

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு சகோதரிகள் உட்பட மூன்று பெண்கள் அருவியில் நீராடிய போது காணாமல் போயுள்ளனர்.

நேற்றைய தினம் கொழும்பு - ஹன்வெல்ல - தும்மோதர - குமரி எல்லை அருவியில் நீராடிக் கொண்டிருந்தபோது 14, 15 வயது சிறுமிகள் 19

## இந்தியா எப்போதுமே இலங்கையுடன் இருக்கும்

### இந்தியத் தூதுவர்



கொழும்பு, டிசெ. 31

நெருங்கிய நண்பராகவும் அயலவராகவும் இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருக்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் 19

## புகையிலை பொருட்கள் விற்பனை; குறைந்தபட்ச வயது 24ஆக உயரும்!

### சிகரெட் விலையும் வருடந்தோறும் உயரும்

கொழும்பு, டிசெ. 31

புகையிலை பொருட்களை விற்பனை செய்தல், கொள்வனவு செய்வதற்கான குறைந்த பட்ச வயதை 21இலிருந்து 24 வயதாக உயர்த்த புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் சமாதி ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

மேலும், வருடாந்தம் சிகரெட் விலையை 19

## கொரோனாவுக்கு 18 பேர் மரணம்!

கொழும்பு, டிசெ. 31

கொரோனா தொற்றுக் காரணமாக நேற்று முன் தினம் மட்டும் 18 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 19

## மின் கட்டணமும் உயராது!

கொழும்பு, டிசெ. 31

“தற்போதைய சூழ்நிலையில் மின் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டம் இல்லை.” - என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நாட்டில் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. இந்நிலையில் மின்சார கட்டணமும் உயருமா என எழுப்பட்ட கேள்விக்கு 19

# இப்படியும் நடக்கிறது...!

தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற விவகாரம் இந்தா, அந்தா என்று இழுபட்டுக்கொண்டே போகின்றது.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி இந்த கடித விவகாரத்தை வெற்றிகரமாக முடிக்கவேண்டும் என்று சம்பந்தன் ஐயாவும் களமிறங்கியிருக்கிறார் என்று ஒரு தகவல். அது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த விடயத்தை ரெலோ முன்னெடுத்தபோதே, இது சாதாரணமான விடயமல்ல, இதன் பின்னணியில் வேறு எவரோ இருக்கலாம் என்ற ஊகம் பல்வேறு தரப்புக்களிலுமிருந்து வரத் தொடங்கியிருந்தது. ஆனால், இது ரெலோவின் முன்னெடுப்பு அல்ல என்பதை மட்டுமன்றி, மற்றுமொரு முக்கிய விடயத்தையும் சம்பந்தனுக்கு ஒரு தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம்.

இலங்கையின் சிறுபான்மை சமூகம் ஒட்டுமொத்தமாக இந்த விடயத்தில் ஒன்றிணைந்திருப்பதும், அந்த ஒன்றிணைவுக்கு - அந்த கூட்டத்திற்கு சம்பந்தன் தலைமை தாங்கியிருப்பதையும் சிலர் வெகுவாகப் பாராட்டினரெனவும் ஈழத்தமிழர்களின் தலைவர் என்ற நிலையிலிருந்து இலங்கை சிறுபான்மை சமூகத்தின் தலைவர் என்ற இடத்தை சம்பந்தன் எட்டியிருப்பதை அவர்கள் பாராட்டினர் என்றும் ஒரு தகவல் ஊர்க்குருவிக்கு கிடைத்தது.

இதனால் சம்பந்தனின் அணுகுமுறையில் திடீர் மாறுதல் ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

பதின்மூன்றுக்கு பதிலாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்று மாற்றப்படுவதனால், அதில் கையொப்பமிட முஸ்லிம் தரப்பு அச்சப்படுவது குறித்தும், இது இந்த கடித விவகாரத்தை குளறுபடியாக்க எடுக்கப்பட்ட முயற்சியா என்ற சந்தேகத்தையும் ஊர்க்குருவி இந்தப் பத்தியில் நேற்று கிளப்பியிருந்தது.

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பதில் முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுவார்கள் என்பது தெரிந்ததுதான்.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணியில் கூட்டமைப்பே முக்கிய வகிபாகத்தை வகித்தது. தாம் தயாரித்த இடைக்கால அறிக்கையில் 'எக்க ராஜ்ய' என்ற பதத்திற்கு விளக்கமளிப்பதிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரும் அரசியலமைப்பு தயாரிப்பில் முக்கிய பங்கு வகித்தவருமான சுமந்திரன் அதிக நேரத்தை செலவிட்டார்.

ஆனால், அவர்கள் தயாரித்த இடைக்கால அறிக்கையில்கூட வடக்கு, கிழக்கு இணைக்கப்படாத அரசியலமைப்பு முன்மொழிவே முன்வைக்கப்பட்டிருந்தது.

நாம் தயாரித்த (அது நடைமுறைக்கு வருகிறதோ இல்லையோ) முன்மொழிவிலேயே வடக்கு, கிழக்கு இணைப்பை சேர்க்காத நாமே, மோடிக்கான கடிதத்தில் அதனை வலுக்கட்டாயமாக சேர்க்க அடம்பிடித்தது பல சந்தேகங்கள் எழுவதற்கு வழிவகுத்தன.

இந்த விவகாரம் தொடர்பாக முதல் முதலில் தமிழ் பேசும் கட்சிகள் யாழப்பாணத்தில் ஒன்றுகூடியபோது, தமிழ் அரசுக் கட்சி அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அதனை சற்று தள்ளிவைக்குமாறு தான் கேட்டிருந்தாரெனவும் அதனை ரெலோ செய்யாததாலேயே தாம் கலந்துகொள்ளவில்லை என்றும் அப்போது மாவை சேனாதிராசா இந்த ஊர்க்குருவியிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால், அந்த யாழ்ப்பாணக் கூட்டத்திற்கு தலைமை வகித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், சம்பந்தனின் பங்களிப்பை வலியுறுத்தியிருந்ததோடு இதற்காகவே அடுத்த கூட்டத்தை கொழும்பில் கூட்டுவதற்கும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், கொழும்பில் நடந்த முதலாவது கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சம்பந்தனோ, பதின்மூன்றை வலியுறுத்துவதை ஏற்றுக்கொள்ள அடியோடு மறுத்தார். அதனாலேயே பதின்மூன்று என்ற சொல்லுக்குப் பதிலாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற சொல் பயன்படுத்த முடிவுசெய்யப்பட்டது.

அதனை ஏற்றுக்கொள்ளவே முஸ்லிம் தரப்பு இப்போது தயக்கம்காட்டுவதால் மீண்டும் பதின்மூன்றை வலியுறுத்தியே கடிதத்தை அனுப்பலாமா என்று சிலர் யோசிக்க ஆரம்பித்தனர். அதற்கு தமிழ் அரசு மறுத்தால் அவர்கள் இல்லாமலேயே கடிதத்தை அனுப்பினால் என்ன என்ற கோணத்திலும் யோசிக்க ஆரம்பித்தனர். அவ்வாறு தமிழ் அரசு அதற்கு தயங்கினால் மாகாண சபை தேர்தலில் தமிழ் அரசு பங்குகொள்வதையும் விமர்சனத்திற்கு உட்படுத்தலாம் என்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டதாம்.

இவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் முதல்வர் கனவிலேயே இருக்கும் தமிழ் அரசுத் தலைவர் சங்கடத்திற்கு உள்ளாக நேரிட்டிருக்கும். இப்போது, இந்த கடித விவகாரம் இலங்கை அரசியல் வரலாற்றில் மற்றுமொரு முக்கிய விவகாரம் ஆகியிருப்பதால்,

மதிப்புக்குரிய பாரதப் பிரதமருக்கு,

தாங்கள் நலமாக இருக்க இலங்கை சிறுபான்மை சமூகத்தின் சார்பில் இறைவனை வேண்டுகின்றோம். எங்கள் தேவைகள் என்ன என்பது தாங்கள் அறியாததல்ல. தங்கள் உதவிக்காகவே காத்திருக்கின்றோம்.

இப்படி நான்கு வரிகளில் என்றாலும் ஒரு கடிதத்தை எழுதி அனுப்பினாலே மிகப்பெரிய வெற்றிதான் என்கிறார் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்சி ஒன்றின் தலைவர்.

உண்மைதான், இன்று அதுவே பெரிய விசயம்தான்.!

**- ஊர்க்குருவி**

## பத்திரிகையாளர் கானமயில்நாதனுக்கு வட்டு. இந்துவில் அஞ்சலி

*யாழ்ப்பாணம், டிசெ. 31*

அண்மையில் காலமான யாழ்ப்பாணத்தின் முதுபெரும் பத்திரிகையாளரான ம. வ. கானமயில்நாதனுக்கு அஞ்சலி நிகழ்வு ஒன்று நேற்று இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இதன் போது அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பத்திரிகையாளர் பண்டிதர் ந. கடம்பேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், பத்திரிகையாளர்கள், மதருகுமார் அன்னாரின் உறவினர்கள், ஊடகக்கற்கை ஆசிரியர்கள், ஊடகத்துறை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## திருக்கோவில் பொலிஸாருக்கு இடமாற்றம்!

*திருக்கோவில், டிசெ. 31*

அம்பாறை - திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து அங்கு கடமையாற்றி வரும் அனைத்து பொலிஸாரையும் உடன் இடமாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணை இடம்பெற்றுவருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி இரவு திருக்கோவில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பொலிஸார்மீது மேற்கொண்ட துப்பாக்கி சம்பவத்தில் நான்கு பொலிஸார் உயிரிழந்தனர். அத்துடன், 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இது தொடர்பான, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸார் உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளனர். விசாரணைகள் நியாயமாக இடம்பெறுவதை உறுதி செய்யவே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தவறிவிட்டது

மதியாபரணம் நிரோசன் எனது தேசிய அடையாள அட்டை(930670952v), சாரதி அனுமதி பத்திரம், Atm காட், சிறு தொகை பணம் மற்றும் ஆவணங்களுடன் தவறவிடபட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**0771530763**
**0779658252**

## கல்வி tv CHANNEL-1

### 21.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

### 31.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
31.12.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## சம்பந்தனின் கடமை?

கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன் இலங்கையின் மூத்த அரசியல் தலைவர். மிதவாத அரசியல், இயக்கங்களின் காலம் இறுதியாக விடுதலைப் புலிகளின் காலமென, அனைத்திலும், சம்பந்தன் ஓர் அரசியல் வாதியாக நனைந்திருக்கின்றார். ஆனாலும் சம்பந்தன் ஒரு தீர்மானிக்கவல்ல தலைவராக வந்தது, 2009இற்கு பின்னரான காலத்தில்தான். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நீலன் திருச்செல்வம் படு கொலை செய்யப்பட்டிருந்தார். அடுத்தது சம்பந்தன்தான், என்றவாறான ஓர் அபிப்பிராயம் திருகோணமலையில் மட்டுமல்ல தமிழ் அரசியல் சூழலிலும் பரவலாகப் பேசப்பட்டது. சம்பந்தன் 2012இல் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையொன்றில், தனது பெயர் விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்ததாக குறிப்பிட்டிருக்கின்றார்.

அப்படியான சம்பந்தன் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமையால் வழிநடத்தப்பட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆள் ஒரு பெறுமதியானவர்தான் என்னும் அபிப்பிராயம் வன்னியிலும் காணப்பட்டது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து, தனது இருப்பை பாதுகாத்துக் கொள்வதில் சம்பந்தன் மிகவும் சாமர்த்தியசாலி. சம்பந்தன் இப்போதும் தவிர்க்க முடியாத ஒருவராக இருப்பதற்கு அவரின், இந்த - தக்கன பிழைக்கும் சாமர்த்தியம்தான் காரணம்.

இந்த சாமர்த்தியம் சம்பந்தனின் தனிப்பட்ட அரசியல் இருப்புக்கு பயன்பட்டாலும்கூட - அவரின் ஆற்றலும் ஆளுமையும் மக்களின் நலனை வெற்றிகொள்வதற்கு எந்தளவு தூரம் பயன்பட்டிருக்கின்றது? இதற்கான பதில் அவரிடமே இருக்கலாம். கூட்டமைப்பின் தலைவர் என்னும் வகையில், 2009இற்கு பின்னரான அரசியல் நகர்வுகளில் அனைத்து முடிவுகளையும் அவரே மேற்கொண்டிருந்தார். ஆனாலும், கடந்த 12 வருடங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அரசியல் வெற்றிகள் எதனையும் சம்பந்தனால் காண்பிக்க முடியவில்லை.

தமிழர்களின் இன்றைய நிலைக்கு சம்பந்தன்மீது மட்டும் குற்றம்சாட்ட முடியாது. அவ்வாறு குறிப்பிட்டால் அது தவறானது. இந்தியாவின் நேரடியான தலையீட்டுக்கு பின்னரான காலத்தில், கூட்டணியின் சார்பில் மேற்கொண்ட அனைத்து முடிவுகளும் அமிர்தலிங்கத்தால்தான் மேற்கொள்ளப்பட்டது. அமிர்தலிங்கத்தின் மறைவிற்கு பின்னரான காலமென்பது, இயக்கங்களின் காலம். இந்தக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எந்தவொரு முக்கியத்துவமும் இருந்திருக்கவில்லை. ஒரு வகையில் வீட்டில் இருக்கும் முதியவர்களின் நிலையில்தான் சம்பந்தன் போன்றவர்கள் இருந்தனர்.

2009இற்கு பின்னரான காலத்தில் சம்பந்தனின், முழு ஆற்றலையும் பிரயோகிக்கக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தது. சம்பந்தனை அனைவருமே தலைவராக ஏற்றுக்கொண்டனர். மிதவாதிகள், ஆயுதப் போராட்டத்திலிருந்து ஜனநாயகத்திற்கு திரும்பியவர்கள் அனைவருக்கும் தலைவராக இருக்கக் கூடிய வாய்ப்பு சம்பந்தனுக்கு கிடைத்தது. இவ்வாறானதொரு வாய்ப்பு வேறு எந்தவொரு மிதவாத தலைவருக்கும் கிடைக்கவில்லை. கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்திருந்தால் இன்று அனைத்து தமிழ்த் தேசிய தரப்புக்களும் சம்பந்தனின் தலைமையின்கீழ்தான் இருந்திருப்பர். பிளவுகள் ஏற்பட்டிருக்காது. ஒரு தகப்பன் ஸ்தானத்தில் அனைத்து பிள்ளைகளையும் அரவணைத்து செல்லும் வாய்ப்பை சம்பந்தன் சரியாக பயன்படுத்திக் கொண்டாரா என்னும் கேள்விக்கு அவர்தான் பதிலை காணவேண்டும்.

இன்று ஒரு குடும்பமாக இருந்தவர்கள் மூன்று வேறு குடும்பங்களாக இருக்கின்றனர். ஆனாலும் வரலாற்றில் வாய்ப்புக்கள் கிடைக்காமல் போவதில்லை. இன்று மீண்டுமொரு வரலாற்று சந்தர்ப்பம் சம்பந்தனை நோக்கி வந்திருக்கின்றது. ஈழத் தமிழ் மக்கள், மலைய மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகிய மூன்று மக்கள் கூட்டத்தினதும் சார்பில் தலைமை தாங்குவதற்கான ஒரு வாய்ப்பு அவரைத் தேடிவந்திருக்கின்றது. 11 கட்சிகள், சம்பந்தனின் கையெழுத்துக்காகக் காத்திருக்கின்றனர். இந்த விடயத்தில் ஒரு தகப்பன் ஸ்தானத்தில் அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டியது சம்பந்தனின் கடமையாகும். சம்பந்தன், அவரை சுற்றியிருப்பவர்களால் குழப்பப்படக்கூடிய ஒருவரல்ல. இந்த வரலாற்று சந்தர்ப்பத்தை சம்பந்தன் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படியொரு வரலாற்று சந்தர்ப்பம் இனி சம்பந்தனுக்கு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை.

# அரசின் ‘பிரசார பீரங்கிகள்’ தமது தரப்பையே குறிவைக்க முஸ்தீபு!

அலசுவது இராஜதந்திரி

*அரச தரப்பின் ‘பிரசார பீரங்கிகள்’ என்று இதுவரை காலமும் அரசுக்காக முழக்கமிட்டு துதிபாடி வந்த அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரே தமது அமைச்சுப் பதவிகளை துறப்பதற்கும் அஞ்சமாட்டோம் என்று கூறியுள்ளனர்.*

*இன்றைய அரசாங்கத்தை பதவியிலமர்த்துவதில் மிகுந்த பங்களிப்பை நாட்டின் பட்டிதொட்டி எங்கும் மேற்கொண்டவர்களே இந்த மூன்று அமைச்சர்களும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இருந்தபோதிலும் அண்மைக்காலங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிச்சையான முடிவுகளையே எடுத்து வருகின்றார் என்று அரச தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.*

*ஒரு வாரத்துக்கு முன்னர் அரசில் அங்கம் வகிப்பவரும் சிரேஷ்ட இடதுசாரி அரசியல் வாதியுமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண முக்கிய விடயங்கள் மற்றும் அவை குறித்த தீர்மானங்கள் குறித்து ஜனாதிபதி தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கிறாரேதவிர, அரச தரப்பிலிருப்போருடன் எதனையும் வெளிப்படையாக கலந்தாலோசித்து முடிவுகளை எடுப்பதில்லை எனவும் கூறியிருந்தார்.*

*ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரப் போக்குடனேயே ஜனாதிபதியின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன என்ற குற்றச்சாட்டே தற்போது எதிர்கட்சியினரால் மட்டுமல்ல. அரச தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.*

*மற்றுமோர் எதிரணி பாராளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனைவிட ராஜபக்ஷ குடும்பத்தினரே நாட்டுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்று தெரிவத்துள்ளார். அரசியல் அவதானிகள் மற்றும் பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயங்கள்கூட வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற மூன்று தசாப்த காலத்தில் நாடு பொருளாதார ரீதியாக பின்னடைவுகளைக் கண்டிருக்கலாம். ஆனால், இன்றிருப்பதுபோல மிக மோசமான நிலையை நாட்டின் பொருளாதாரம் அடைந்திருக்கவில்லை என்பதாகவே இருக்கின்றன.*

*‘கீரைக்கடைக்கு எதிர்க்கடை’ இருப்பது போலவே பாரளுமன்றில் ஆளுந்தரப்பும் எதிர்தரப்பும் காணப்படுகின்றன. ஆனால், அரச தரப்பினரே தற்போது எதிரணியரைப் போல அரசின் பின்னடைவுகள் குறித்து முழக்கமிட்டு வருகின்றனர்.*

*இதன்மூலம் பிறக்கப்போகும் புதிய ஆண்டில் பிரதம மந்திரி பதவியில்கூட மாற்றம் வரமுடியும் என்று பலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.*

*பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்புகளை நிதி அமைச்சராக இருக்கும் அவரின் சகோதரரான பஸில் ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளே பலமாகத் தென்படுகின்றன. இலங்கையின் ஆட்சியாளருக்கு குறிப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவரின் குடும்பத்தினருக்கும் தென்னிந்தியாவில் இருக்கின்ற திருப்பதி வெங்கடேசப்பெருமான்மீது அதீத பக்தி காணப்படுகின்றது.*

*பிரதமர் ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது திருப்பதிக்கு அடிக்கடி சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கடந்த வாரமும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருப்பதி தேவஸ்தானத்துக்கு சென்று வழிபட்டிருந்தார்.*

*இந்தியாவில் பெரும்பாலான அரசியல் வாதிகள் வைஷ்ணவர்களாக இருக்கின்ற போதிலும் அவர்கள் திருப்பதிக்கு மிக அரிதாகவே வழிபடச்செல்கின்றனர். ஆனால், இந்திய அரசியல் தலைவர்களைவிட அதிகளவில் திருப்பதிக்கு யாத்திரை மேற் கொண்டவராகவே இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விளங்குகின்றார்.*


*இந்தியாவின் திருப்பதி திருத்தலத்தை பொறுத்தவரை உலகிலேயே அதிகூடியளவு வருவாயை ஈட்டுகின்ற வழிபாட்டுத்தலமாகவே திருப்பதி விளங்குகின்றது. திருப்பதியை பணம் கொழிக்கும் ஒரு திருத்தலம் என்றே குறிப்பிடுவது வழக்கமாகும்.*

*எனவே, கல்லாக இருக்கின்ற திருப்பதி வெங்கடாசலபதி உயிரோடிருந்தால் ராஜபக்ஷ குடும்பத்தினர் நாடு தற்போதிருக்கின்ற நிலையில் திருப்பதியானிடமும் காலில் வீழ்ந்து வணங்கி நிதி உதவியைப் பெற்றுக் கொள்வார்களோ என்றே எண்ணத்தோன்றுகின்றது. இருந்தபோதிலும் இந்தியா இலங்கைக்கு நிதி உதவியை வழங்குவதற்கான அறிகுறிகள் தறபோது தென்பட ஆரம்பித்துள்ளன. இதேவேளை, மத்திய வங்கியின் கையிருப்பு தற்போது 310 கோடி டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் சீன மத்திய வங்கியிடமிருந்து 150 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கவிருப்பதாகவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.*

*மத்திய வங்கி ஆளுநரின், இந்தக் கூற்றைப் பார்க்கும்போது தற்போதைய சூழலில் உலகில் அதிகளவு கடன்களைப்பெற்ற நாடாகவே இலங்கை காணப்படுகின்றதோவென எண்ணத்தோன்றுகின்றது.*

*இந்நிலையில் அரசின் ‘பிரசார பீரங்கி’களாக இருப்பவர்களிடமிருந்து மட்டுமல்ல. நாட்டின் சகல தரப்பினரிடமிருந்தும் அரசின் வேரோட்டமே களையெடுக்கப்படுமளவுக்கு மேலும் கடுமையான விமர்சனத் தாக்குதல்களுக்கு அரச தரப்பு முகங்கொடுக்க நேரிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**டிசெம்பர் - 31 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - மார்கழி - 16**
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : துவாதசி




**மேடம்**
குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்து செல்வது மிகவும் நல்லது. நட்பால் நல்ல விஷயம் நடைபெறும். அலைச்சல் உண்டு. எதிரிகளின் பலம் குறையும். சேமிப்பில் ஆர்வம் கொள்வீர்கள்.

**இடபம்**
எடுத்த வேலையை எளிதாக செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருக்கும் உற வினர் மூலம் சுபச்செய்தி வந்து சேரும். தடங்கலாகி நின்றுபோன வேலை இன்று நல்லபடியாக முடியும்.

**மிதுனம்**
குடும்பநிலை திருப்தி தரும். தொழில் வளர்ச்சி உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பணியாளர்கள் நினைத்ததை நிறைவேற்றி நிம்மதி காண்பீர்கள்.

**கடகம்**
பிறரது விமர்சனங்களை மறந்து செயல்படுவது நல்லது. குடும்பத்தில் எதிர்பார்த்த நன்மை வரும். கவலை தீரும். கற்பனை பயம் உண்டாகும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**
வருங்கால நலனுக்காக முக்கிய திட்டங்களை தீட்டுவீர்கள். சேமிப்பு கூடும். குடும்பத்தில் ஒருவருக்கு திருமணம் நிச்சயமாகும். வாழ்க்கைத்துணையின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பீர்கள்.

**கன்னி**
நண்பர்களின் உதவியுடன் நினைத்த விஷயத்தை செய்து முடிப்பீர்கள். புதிதாக சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள். குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றம் உறுதியாகும்

**துலாம்**
இன்றைய பயணங்கள் பலன் தருவதாக அமையும். நண்பர்களின் ஆலோசனைகளை ஏற்று நன்கு முன்னேறுவீர்கள். நெருங்கியவருடன் ஏற்பட்ட பகை உங்களது முயற்சியால் தீரும்.

**விருட்சிகம்**
பொழுதுபோக்கு அம்சங்களில் கூடுதல் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய திட்டங்கள் சற்றுத் தாமதமானாலும் நன்கு நிறைவேறும். தடைப்பட்ட விஷயங்களில் முன்னேற்றம் உண்டு. பயம் தீரும்.

**தனுசு**
நெருங்கிய நண்பர்களிடம் உதவியை எதிர்பார்க்க இயலாது. வெளியில் சொல்ல முடியாமல் இருந்த பிரச்னைகள் தீரும்.விரயங்கள் குறையும். பணியிடத்தில் நன்மை உண்டு.

**மகரம்**
குடும்பத்தில் சுபச்செலவுகள் ஏற்படும். உழைப்பு கூடும். முயற்சி காரணமாக மனநிறைவு கிடைக்கும். ஓய்வு எடுங்கள். உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லையே என்ற எண்ணம் வரும்.

**கும்பம்**
உங்களது கடின உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் விரைவில் வரும். திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. எதிரிகள் என்று நினைத்தவர்கள் உங்களுக்கு நன்மை செய்வர்.

**மீனம்**
குடும்ப விஷயங்களை அடுத்தவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். நெருக்கமான நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். வம்பில் ஈடுபடாதீர்கள். நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்று இருங்கள்.

# மகாராஷ்டிரா வழியில் தமிழக அரசும் ஆளுநர் அதிகாரத்தை மறுவரையறை செய்யவேண்டும்

## மக்கள் நீதி மய்யம் கட்சி வலியுறுத்துகிறது

*சென்னை, டிசெ. 31,*

பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தில் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்கும் பொதுப் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்த மசோதா, மகாராஷ்டிரா சட்டப்பேரவையில் நிறைவேறியதை வரவேற்றுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சி, அதைப்போலவே தமிழக அரசும் ஆளுநரின் அதிகாரத்தை மறுவரையறை செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள் ளது.

இது குறித்து கமல்ஹாசன் தலைமையில் இயங்கும் மக்கள் நீதி மய்யம் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மக்களாட்சித் தத்துவத்தை கடைப்பிடிக்கும் நாட்டில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களிடம் அதிகாரங்கள் இருக்க வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த அதிகாரங்கள் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என்று அரசியல் சாசனத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகாரப்பகிர்வில் மாநிலத்தின் முக்கிய விவகாரங்களில் மத்திய அரசின் கை மேலோங்கி இருப்பதும், மாநில அரசின் கைகள் கட்டப்பட்டிருப்பதும் தொடர்ந்து விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்தப் பின்னணியில்தான் மாநில சுயாட்சி குரல் தமிழகத்தில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. தற்போது விவாதத்திற்குள்ளாகியிருப்பது ஆளுநரின் அதிகார எல்லை குறித்தானது. குறிப்பாக மாநிலப் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தில் ஆளுநரின் தலையீடு குறித்தானது.

மகாராஷ்டிரா சட்டப் பேரவையில் பொதுப் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப் பட்டுள்ளதை மக்கள் நீதி மய்யம் வரவேற்கிறது. இது மாநில சுயாட்சியை நோக்கிய ஒரு முன்னேற்றப் படிக்கல்லாகப் பார்க்கவேண்டும். இந்த சட்டத்திருத்தத்தின் மூலம், வல்லுநர்கள் அடங்கிய தேர்வுக்குழு பரிந்துரைத்த பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து, மாநில அரசு பரிந்துரைக்கும் நபர்களில் ஒருவரை மட்டுமே பல்கலைக்கழக துணைவேந்தராக ஆளுநரால் நியமனம் செய்ய முடியும் (இதுநாள்வரை தேர்வுக்குழுவானது பரிந்துரையை ஆளுநருக்கு நேரடியாக அனுப்பிவைத்தது). இதனால், ஆளுநரின் விருப்பத்திற்கேற்ப இனிமேல் துணைவேந்தரை நியமிக்க முடியாது.

தற்போது, மகாராஷ்டிராவில் இது குறித்தான சட்டம் இயற்றப்பட்டுள்ள நிகழ்வானது, தமிழகத்திலும் உயர் கல்வியில் ஆளுநரின் அதிகார எல்லை பற்றிய விரிவான விவாதம் நடத்தப்பட வேண்டியதை நினைவுகூர்வதாகக் கருத வேண்டும். கல்வியாளர்கள், துறைசார் வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்து - அவர்களிடமிருந்து விரிவான பரிந்துரையைப் பெற்று தமிழக அரசும், மாநிலப் பல்கலைக் கழக விவகாரங்களில் ஆளுநரின் அதிகார எல்லையை மறுவரையறை செய்வதற்கான சட்டத் திருத்தத்தை விரைவில் கொண்டு வரவேண்டுமென்று மாநில சுயாட்சி, அதிகாரப் பரவலுக்காகத் தொடர்ந்து குரல்கொடுக்கும் மக்கள் நீதி மய்யம் வலியுறுத்துகிறது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எடப்பாடி ஆட்சிக்கும் ஸ்டாலின் ஆட்சிக்கும் வித்தியாசமில்லை

## டிடிவி தினகரன் கருத்து

*சென்னை, டிசெ. 31,*

"எடப்பாடி ஆட்சிக்கும் ஸ்டாலின் ஆட்சிக்கும் வித்தியாசமில்லை" என அ. ம. மு. க பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் விமர்சித்துள்ளார்.

கொரோனா தொற்று அதிகரிப்பு மற்றும் ஒமைக்ரோன் பரவல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, இன்று இரவு 12.00 மணிக்கு மேல் சென்னையில் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்படுகிறது என்று தமிழ்நாடு காவல்துறை தெரிவித்துள்ள நிலையில், இரவு மக்கள் கோயில்களுக்கு செல்லலாம் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

ஒரே நேரத்தில் இருதுறையின் வெவ்வேறு அறிவிப்புகள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்று இரவு வெளியே செல்ல வேண்டுமா? செல்லக் கூடாதா? என்று பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் அ. ம. மு. க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது ருவிட்டர் பக்கத்தில், "டிசெம்பர் 31 இரவு 12 மணிக்கு மேல் சென்னையில் வாகனப் போக்குவரத்திற்கு டிஜிபி தடை விதிக்கிறார். அதே நாளில் நள்ளிரவு 12 மணிக்கு மேல் கோயில்களில் மக்கள் தரிசனம் செய்யலாம் என அறநிலைத்துறை அமைச்சர் சொல்கிறார்.

இன்னொரு பக்கம் பெற்றோல், டீசலை ஜிஎஸ்டிக்குள் கொண்டுவர முடியாது என்கிறார் தமிழக நிதியமைச்சர். நிதியமைச்சர் கூறுவது அவரது தனிப்பட்ட கருத்து என்கிறார் ஆளும் திமுகவின் பாராளு மன்றக் குழுத்தலைவர். தமிழக அரசு நிர்வாகத்தில் என்னதான் நடக்கிறது?

குளறுபடிகளின் உச்சமாக இருந்த பழனிசாமி கம்பனியின் நிர்வாகத்திற்கும் இப்போதைய ஸ்டாலின் ஆட்சிக்கும் பெரிய வித்தியாசமில்லை" என்று விமர்சித்துள்ளார்.

# சென்னையில் கொரோனா கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்த தமிழக அரசிற்கு அறிவுறுத்தல்

*சென்னை, டிசெ. 31,*

சென்னையில் கொரோனா கட்டுப்பாடுகளை அதிகரிக்க வேண்டும் என தமிழக மருத்துவத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனுக்கு ஒன்றிய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த 2 வாரங்களாக திடீரென்று கணிசமான அளவில் கொரோனா தொற்று அதிகரித்து இருப்பதாக ஒன்றிய சுகாதாரத்துறையின் செயலாளர் ராஜேஷ் பூஷன் தமிழக சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

டிசம்பர் முதல் வாரத்தில் 1088ஆக இருந்த நோய் தொற்று இரண்டாவது வாரத்தில் 987ஆகவும், மூன்றாவது வாரத்தில் 1039 ஆகவும், அதுவே தற்போது நான்காவது வாரத்தில் 1720 என்கிற அளவில் கடந்த 2 வாரங்களாக நோய் தொற்று அதிகரித்து இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நோய் தொற்றுக்களை கண்டறிவதற்காக எடுத்துக்கொள்ளும் காலம் என்பது இரண்டு மடங்காக உள்ளது. அதன் காரணமாகவும் இந்த நோய் தொற்று அதிகரித்திருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, இந்த நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கும், நோய் தொற்றை தாமதமாக கண்டறிவதும், மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்கவும் தேவையான உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் தமிழக சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனுக்கு ஒன்றிய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் தற்போது சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் பல்வேறு வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் நோய் பரவல் ஏற்படாமல் இருப்பதை தடுப்பதற்கு தேவையான கண்டிப்பான சில கட்டுப்பாடுகளை விதிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பால்மா விலை உயர்ந்தது!

கொழும்பு, டிசெ. 31

இறக்குமதி செய்யப்படும் பாலமாவின் விலை உடன் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை பால்மா இறக்குமதியாளர் சங்கம் நேற்று விடுத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 150 ரூபாயாலும், 400 கிராம் பால் மாவின் விலை 60 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விலைப் பட்டியலின் பிரகாரம் ஒரு கிலோ பால்மா ஆயிரத்து 345 ரூபாய்க்கும், 400 கிராம் பால்மா 540 ரூபாவுய்க்கும் சந்தையில் விற்பனை செய்யப்படும்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா விலைகள் கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டது. அதன் பின்னர் உள்நாட்டு பால்மா விலைகளும் அதிகரிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே தற்போது மீண்டும் அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. (அ)

# சிறப்பான போக்குவரத்து சேவை மக்களுக்கு வழங்கப்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 31

**மக்களுக்கு சிறப்பான போக்குவரத்து சேவை கிடைக்கும் வகையில் அரச மற்றும் தனியார் போக்குவத்து சேவை விரைவில் ஒழுங்கு படுத்தப் படும் என்று அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

மேலும், யாழ்ப்பாண நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தை பயன்படுத்துவது தொடர்பான இழுபறி நிலைக்கு விரைவில் இறுதித் தீர்வு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இலங்கை போக்குவரத்து சபையினருக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர், மக்களுக்கு பாதிப்புக்கள் அற்ற நிறைவான போக்குவரத்து சேவை வழங்கப்பட வேண்டும். அதற்கு அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினர் மத்தியில் புரிந்துணர்வுடனான சேவை ஏற்படுத்துவதே இன் றைய



கூட்டத்தின் நோக்கம்-என்றார்.

இந்த கூட்டத்தின்போது, யாழ்.மாவட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளை இணைந்த நேர அட்டவணையில் மேற்கொள்வதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள், மற்றும் யாழ்.நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செயற்படுத்தவது உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், குறித்த விடயங்கள் தொடர்பாக துறை சார் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியின் செயலராக பெப்ரவரி கடமையேற்கிறார் காமினி செனரத்!

கொழும்பு, டிசெ. 31

ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்படவுள்ள காமினி செனரத், 2022 பெப்ரவரி மாதம் கடமையேற்பாரென அறியமுடிகின்றது.

ஜனாதிபதியின் செயலாளர் பதவியை வகிக்கும் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர, அப்பதவியில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளார். 2022 ஜனவரி 30 ஆம் திகதி முதல் அவர் இவ்வாறு விலகவுள்ளார்.

அதன்பின்னர் பெப்ரவரி மாதம் முதல் காமினி செனரத் கடமையேற்பார். காமினி



செனரத் பிரதமர் மஹிந்தவுக்கு நெருக்கமானவர். தற்போது அலரிமாளிகையில் முக்கிய பதவி வகிக்கின்றார்.

ஜனாதிபதியின் செயலாளர் பதவியில் இருந்து விலகும் பி. பி. ஜயசுந்தரவுக்கு நிதி அமைச்சின் உயர் பதவியொன்று காத்திருக்கின்றது. (அ)

# சீசெல்ஸில் கழுத்து நெரித்து கொல்லப்பட்ட இலங்கையர்!

கொழும்பு, டிசெ. 31

சீசெல்ஸில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கையரின், பிரேத பரிசோதனை அறிக்கையில், அவர் கழுத்தை நெரித்து கொல்லப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென பொலிஸார் தெரிவித்தனர்.

சீசெல்ஸில் மூன்றாவது அதிக மக்கள்தொகை கொண்ட தீவான லா டிகுவில் வசிக்கும் ஹரீந்திர பொன்னவிலகே டொன் (வயது-47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சீசெல்ஸின் வர்த்தகர் ஒருவரிடம் ஹரீந்திர பணியாற்றி வந்துள்ளார். வர்த்தகருக்கு சொந்தமான வீடொன்றில் டிசெம்பர் 10 வெள்ளிக்கிழமை காலை 8.50 மணியளவில் இலங்கையரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

நான்கு நாட்களாகியும் வேலைக்குச் செல்லாத நிலையில் இலங்கையரைத் தேடிச் சென்றதாக கட்டுமான நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

வீட்டுக்கு சென்றபோது யாரையும் காணவில்லை என்றும், படுக்கையறை ஜன்னல் வழியாக சென்று பார்த்த போது, தரையில் அந்த ஊழியர் வீழ்ந்து கிடந்ததாகவும், தாம் கூப்பிட்டபோதும் பதில் சொல்லாததையடுத்து, பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததாகவும் அவர் கூறினார்.

வீட்டில் நடத்தப்பட்ட பரிசோதனையில் உடலில் எந்த அறிகுறியும் தெரியவில்லை.

மூன்று நாட்களுக்குப் பிறகு பொலிஸாரால் பரிந்துரைக்கப்பட்ட பிரேத பரிசோதனையில், இலங்கையர் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது. அதன் பிறகு விசாரணை மற்றொரு பரிமாணத்தை எடுத்து இப்போது கொலை வழக்காக மாறியுள்ளது.

இக்கொலை வழக்கில் நேற்று வரை சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# 26 நாள்களில் இலங்கைக்கு 69,941 சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, டிசெ. 31

டிசெம்பர் மாதத்தின் முதல் 26 நாட்களில் மாத்திரம் 69,941 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் ஒரு மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும் .

டிசெம்பரில் வந்த சுற்றுலாப் பயணிகளில் 19,574 பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்ததோடு ரஷ்யாவில் இருந்து 7,951 சுற்றுலாப் பயணிகளும், இங்கிலாந்தில் இருந்து 6,819 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கை வந்துள்ளனர்.

மேலும் 4,131 சுற்றுலா பயணிகள் ஜேர்மனியிலிருந்து வந்துள்ளனர். டிசெம்பர் மாதம் முதல் 26 நாட்களில் அவுஸ்திரேலியாவிலிருந்து 2,620 சுற்றுலாப் பயணிகளும், அமெரிக்காவிலிருந்து 2,462, பிரான்ஸிலிருந்து 2,313, மாலைதீவிலிருந்து 2,283 மற்றும் உக்ரைனில் இருந்து 2,054 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# விபசார விடுதி சுற்றிவளைப்பு; 5 பெண்கள் கைது!

கொழும்பு, டிசெ 31

கல்கிசை, இரத்மலானை பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதியொன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது முகாமையாளர் உட்பட ஐந்து பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்கள் 40, 32, 43 மற்றும் 25 வயதுடைய இரத்மலானை, போகஸ்வெவ, பிடபெத்தர மற்றும் பண்டாரவளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

# நேற்று முதல் நடத்துநர் இல்லாமல் பஸ் சேவை

கொழும்பு, டிசெ. 31

நடத்துநர் இல்லாமல் பஸ் போக்குவரத்தை முன்னெடுக்கும் புதிய திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தன்னியக்க கட்டண முறையொன்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் ஏதேனும் நிவாரணம் கிடைக்கும் விதத்திலான கலந்துரையாடல்களை மத்திய வங்கி ஆளுநருடன் நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# இலங்கையை சேர்ந்த யுவதிகள் சீனாவில் பாலியல் தொழிலில்!

கொழும்பு, டிசெ. 31

திருமணம் செய்து இலங்கைப் பெண்களை சீனாவுக்கு அழைத்துச் செல்லும் சீனர்கள் அவர்களை கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவென்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேலைத்திட்டங்களுக்காக இலங்கைவரும் சீனர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அழகிய பெண்களை இலக்கு வைத்து அவர்களை திருமணம் செய்து சீனாவுக்கு அழைத்துச் சென்று அங்கு குறித்த நடவடிக்கைகளுக்கு உட்படுத்திவருவதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன.

ஹொரண பிரதேசத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரை அவ்வாறான நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்காக அழைத்துச் செல்ல முயற்சித்தபோது கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின்போதே இந்த தகவல்கள் வெளியாகியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு பத்துக்கும் மேற் பட்ட இளம் பெண்கள் சிக்கி யிருக்கின்றனனர் என தெரியவந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் காரணமாகவே, வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை திருமணம் செய்து கொள்வதற்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# சர்வதேச நாடுகளிடம் கடன்களைப் பெற்று வெளிநாட்டு கையிருப்பை தக்கவைப்பதா?

## அது ஆபத்தானது என்கிறார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, டிசெ. 31

**சர்வதேச நாடுகளிடம் கடன்களை பெற்று எமது வெளிநாட்டு கையிருப்பை தக்கவைக்க முடியாது. அவ்வாறு முயற்சிப்பதன் மூலமாக மேலும் மோசமான கடன் பொறிக்குள் சிக்கும் நிலைமையே ஏற்படுமென இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறுகியகால சவால்களை எவ்வாறு கையாளப்போகின்றோம், நீண்டகாலக் கடன் நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்க போகின்றோம் என்பன பாரதூரமான பிரச்னையாகும்.

நாட்டுக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய டொலர்கள் இல்லை, குழந்தைகளுக்கான பால்மாவை இறக்குமதி செய்ய வெளிநாட்டு கையிருப்பு இல்லை, துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களை விடுவிக்க டொலர் இல்லை.

நாட்டில் பாரிய அளவில் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலையொன்று ஏற்பட்டுள்ளது. இவற்றை சமாளிக்கக்கூடிய வகையில் எமது வெளிநாட்டு கையிருப்பு இல்லை. கடன்களை பெற்று வெளிநாட்டு கையிருப்பை வெளிக்காட்ட முடியாது.

எமது கையிருப்பில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களே உள்ளன. இப்போது சீனாவிடம் பெற்றுக்கொண்ட கடன்கள் மூலமாக இந்த எண்ணிக்கை 3.1 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

எனினும் இவ்வாறு வேறு நாடுகளிடம் கடன்களை பெற்றுக்கொண்டு எமது கையிருப்பை தக்கவைக்க முடியாது. பெற்றுக்கொண்ட கடன்களை வட்டியுடன் மீளவும் செலுத்த வேண்டும்.

ஆகவே கடன்களில் வெளிநாட்டு கையிருப்பை தக்கவைக்க நினைப்பது பாதகமான செயற்பாடாகும். இதன்போது குறுகியகால சவால்களை எவ்வாறு கையாளப்போகின்றோம். நீண்டகால கடன் நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்க போகின்றோம் என்பன பாரதூரமான பிரச்னையாகும்.

அடுத்த ஆண்டில் 6.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை சர்வதேச கடன்களாக செலுத்த வேண்டியுள்ளது. இவற்றில் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் உள்ளடங்குகின்றன.

எனவே இவற்றை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதையோ அல்லது வேறு மாற்று வேலைத்திட்டங்களை கையாள்வதையோ சிந்திக்க வேண்டும். எந்த தீர்மானம் எடுத்தாலும் அவற்றை உடனடியாக எடுக்கவேண்டும்-என்றார். (அ)






# சுகாதார தொழில்சங்கம் நேற்று யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

சுகாதார தொழில்சங்கக் கூட்டமைப்புடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் மாகாண ரீதியாக நடத்தப்படும் தொழில்சங்க நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வடமாகாணம் முழுவதும் உள்ள சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் சுகாதாரத் துறையை அழிக்காதே, சுகாதார நிர்வாக சேவையை ஆரம்பி,விசேட கொடுப்பனவை உயர்த்து, பொது மக்களின் ஆரோக்கியத்தில் கவனம் எடு, பதவி உயர்வு முரண்பாட்டை தீர்த்து வை, பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக முகக்கவசங்களை வழங்கு, றணுக்கின் அறிக்கையை நடைமுறைப்படுத்து போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டம் காரணமாக யாழ்.நகரப் பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது. அதனை சீர் செய்வதற்காக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (அ-03)

# சகல அரச ஊழியர்களையும் சேவைக்கு அழைக்க முடிவு

கொழும்பு, டிசெ. 31

எதிர்வரும் 3ஆம் திகதி முதல் அனைத்து அரச ஊழியர்களையும் சேவைக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி இந்த விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாகவே எதிர்வரும் 3ஆம் திகதி முதல் அரச சேவைகள் முழுமையாக முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்கு கோட்டா பாவித்த ஆயுதமே ஞானசாரர்!

## கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 31

நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்கு, கோட்டா பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக் கையில்-

நாட்டில் ஜனநாயகம் பேசினால் சிறையில் அடைக்கும் ஆட்சியின் கீழ் நாம் வாழ்கின்றோம்.

நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்காக, சிறையில் இருந்த தேரரை கொண்டு வந்து தனது ஆயுதமாக கோட்டாபய பயன்படுத்தி வருகின்றார்.

இராணுவத் தளபதிகளை அமைச்சின் செயலாளர்களாக அவர் நியமித்துள்ளார். கிட்டத்தட்ட 14 அமைச்சின் செயலாளர்கள் இராணுவத் தளபதிகள். அத்துடன் ஆளுநர், திணைக்கள தலைவர்களும் அவ்வாறே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புத்த பெருமானின் அவதாரமாக தன்னை காட்டிக்கொள்ளும் தேரர் இப்போது, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற புதிய அவதாரத்தை எடுத்துள்ளார்.

நாம் இப்போதும் இராணுவ ஆட்சியில் தான் உள்ளோம். இது தமிழ் மக்களுக்கு மட்டும் இடி அல்ல. சிங்கள மக்களுக்கும் இது ஆபத்தானது. ஏனென்றால் 1970களில் கதிர்காமத்து அழகி மன்னம்பேரியை நிர்வாணமாக்கி கொன்றவர்கள் இராணுவத்தினர்.

பிரேமதாஸ காலத்திலும் சுமார் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்காக அப்போது பிரேமதாஸவுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசம் வரை சென்றிருந்தார்.

ஆகவே, இராணுவத்துக்கு சிங்களம், தமிழ் என்ற வேறுபாடு இல்லை. துப்பாக்கி முனையில் அனைவரையும் கொல்வதே அவர்களின் நோக்கம்.

தமிழர்கள் முதலும் இராணுவ ஆட்சியில் இருந்தார்கள். அதேபோல பொருளாதார ரீதியான பிரச்னைகளை தமிழர்கள் எதிர்கொண்டு வாழ்ந் தவர்கள். எனவே தமிழர்களுக்கு இது புதிதல்ல. சிங்கள மக்கள் தற்போது துன்பத்தை உணர ஆரம்பித்துள்ளனர்-என்றார். (அ)

# உலக சுற்றுலா அழகியானார் இலங்கை பெண் நலிஷா பானு

கொழும்பு, டிசெ. 31


2021ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுலா அழகியாக இலங்கைப் பெண் நலிஷா பானு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

30 நாடுகளுக்கிடையில் நடைபெற்ற உலக சுற்றுலா அழகி போட்டியில் இலங்கைப் பெண் வெற்றி பெற்றுள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுலா அழகி இறுதிப் போட்டி 28ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்றது.

இதில் ஈக்குவடோர் 2ஆவது இடத்தையும், கனடா 3ஆவது இடத்தையும் பிடித்தன.






22 வயதான நலிஷா பானு உலக சுற்றுலா அழகிப் பட்டத்தை காட்டிலும், மிஸ் பொப்பியுலர் மற்றும் மிஸ் ரலண்ட் பட்டங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலஞ்சம் பெற்ற 36 பேர் கைது

கொழும்பு, டிசெ. 31

இலஞ்சம் பெற்ற 36 பேர் இதுவரையிலான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டிருப்பதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றி புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் இது தொடர்பில் 70 முற்றுகை மேற்கொள்ளப்பட்டதாகவும், இதில் 33 முற்றுகைகளில் இருந்து 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆணைக்குழுவின் செயலாளர் அப்ஷரா கல்போரா தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 தலைமை பொலிஸ் பரிசோதகர்கள் அடங்கலாக 5 பொலிஸாரும் அடங்குவதாக ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், 2 நகர சபை உறுப்பினர்கள், பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பெண்களும் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

# திருமணம் செய்துகொள்வதற்கு இலங்கை வந்தவர்கள் தவிப்பு!

*அவசர அவசரமாக பதிவுத் திருமணத்துக்கு ஏற்பாடு*

**கொழும்பு, டிசெ. 31**

**வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்ய எதிர்பார்க்கும் எந்த இலங்கையரும் அத்திருமணத்தைப் பதிவுசெய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் ' பாதுகாப்பு தடைநீக்கல் சான்றிதழ் பெறுவது' 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டா யமாக்கப்பட்டுள்ளமையால் திருமணம் செய்துகொள்ளும் எதிர்பார்ப்பில் இலங்கை வந்துள்ளவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளமை பற்றிய தகவல்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளியாகியவண்ணமுள்ளன.**

புதிய பாதுகாப்பு விதிமுறைகளை தவிர்த்துக்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டவர்கள் பலரும் திருமணப் பதிவாளர்களிடம் படையெடுத்துவருகின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும் பணத்தையும் பெறுமதியான நேரத்தையும் செலவழித்து திருமணத்திற்காக இலங்கை விஜயம் செய்துள்ள வெளிநாட்டவர்கள் எப்படியேனும் திருமணப் பதிவையேனும் நடத்திமுடித்துவிடவேண்டும் என்ற முனைப்பில் இறுதிக் கட்ட நகர்வுகளில் முனைப்பாக இறங்கியுள்ளதாக அறியமுடிகின்றது.

கொழும்பைச் சேர்ந்த திருமண பதிவாளரொருவர் கருத்து வெளியிடுகையில் ' இலங்கை அரசாங்கம் புதிதாக கொண்டு வந்துள்ள நடவடிக்கை முற்று முழுதாக வெளிநாட்டவர்களையா கட்டுப்படுத்தும் அன்றேல் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட ஆனால் தற்போது வெளிநாடுகளின் பிரஜைகளாக மாறிவிட்டவர்களையும் கட்டுப்படுத்துமா என்பது தொடர்பில் தமக்கே தெளிவற்ற நிலை இருப்பதாக தெரிவித்தார்.

மற்றுமொரு திருமணப் பதிவாளரிடம் வினவியபோது ' இந்த நடைமுறை 2022 ஜனவரி முதலாம் திகதி முதலே அமுலுக்கு வருகின்ற காரணத்தால் திருமணத்திற்காக இலங்கை வந்திருக்கின்றவர்கள் இந்த வருட முடிவிற்குள் எழுத்துமூல திருமணப்பதிவை செய்வதற்கு தாம் ஆலோசனை வழங்குவதாக தெரிவித்தார். எழுத்துமூல பதிவை முடித்துவிட்டு பின்னர் தேவைப்படின் அவர்கள் அடுத்த வருடத்தில் வைபவத்தை எடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட ஜோடிகள் கடந்த சில தினங்களுக்குள்ளாக தமது அலுவலகத்தில் எழுத்துமூல திருமணப்பதிவைச் செய்துகொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழல் தொடர்பாக பதிவாளர்களும் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். (அ)





# காணாமல்போனோரின் உறவினர் நேற்று முல்லைத்தீவில் போராட்டம்

*முல்லைத்தீவு, டிசெ. 31*

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது .

கோவிட் - 19 சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது .

கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று 1757 ஆவது நாளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் இடம்பெறும் கொட்டகைக்கு முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கே எங்கே உறவுகள் எங்கே, குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து , வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில் சொல் , மரண சான்றிதழும் வேண்டாம் நட்டஈடும் வேண்டாம் என்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# திடீர் விபத்துகளால் வருடாந்தம் சுமார் 12 ஆயிரம் பேர் உயிரிழப்பு

*கொழும்பு, டிசெ. 31*

நாட்டில் வருடமொன்றுக்கு சுமார் 12,000 பேர், திடீர் விபத்துக்களினால் உயிரிழக்கின்றனரென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாளொன்றுக்கு 35 பேரளவில் திடீர் விபத்துக்களினால் உயிரிழந்தனர் என சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

வருடமொன்றுக்கு 3 முதல் 4 மில்லியனுக்கு இடைப்பட்ட அளவிலானோர் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகின்ற நிலையில், அவர்களுள் நாளாந்தம் 12,000 பேரளவில் உயிரிழக்கின்றனர் என தொற்றா நோய் பிரிவு கூறியுள்ளது.

# சொகுசு பஸ் விபத்து நான்கு பேர் காயம்!

*கொழும்பு, டிசெ. 31*

அப்புத்தளை 'அயிஸ்பீலி' என்ற இடத்தில் சிறியரக பஸ் ஒன்று நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த இந்த சிறியரக பஸ், மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளாகியது. இவ் விபத்தில் நான்கு பேருக்கு காயங்கள் ஏற்பட்டு, அப்புத்தளை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

அப்புத்தளை பொலிஸார் விபத்து குறித்து, விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கோட்டாபய ஆட்சியில் நாடு முன்னேறவில்லை

*சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு*

*கொழும்பு, டிசெ. 31*

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடைந்த போதிலும் நாடு முன்னேற்றம் அடையவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகின் பிற பகுதிகளில் தொற்றுநோய் அபிவிருத்திக்கு ஒரு காரணமாகப் பயன்படுத்தப்பட்டாலும், அரசாங்கம் இலங்கையின் வீழ்ச்சிக்கு தொற்றுநோயை ஒரு காரணமாகப் பயன்படுத்தியது.

இலங்கை மாத்திரம் இந்த தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதா? தொற்று நோய்க்கு மத்தியில் ஏனைய நாடுகளில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன.

கடந்த காலாண்டில் இலங்கை எதிர்மறையான வளர்ச்சியை பெற்றுள்ள நிலையில், ஏனைய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது.

தொற்றுநோய்களின் விளைவாக, புதிய தொழிற்சாலைகள் ஏனைய நாடுகளில் நிறுவப்பட்டன. அதே நேரத்தில் அவை புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் யோசனைகளுடன் அபிவிருத்தியடைந்தன. இதன் விளைவாக இளைஞர்களுக்கு புதிய வேலைகள் கிடைத்தன.

எவ்வாறாயினும் இலங்கையில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளது.

தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மக்கள் நிராகரித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக புதிய கலாசாரத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

தற்போதைய அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக பொது மக்களுக்கு கடுமையான சுமையை ஏற்படுத்தியுள்ளது. மாற்றத்திற்கான நேரம் இது- என்றார். (அ)

# வவுனியா வைத்தியசாலையிலும் சுகாதாரத் தரப்பினர் போராட்டம்

*வவுனியா, டிசெ. 31*

வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் தாதியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் மற்றும் குறை நிரப்பு மருத்துவர் சங்கம் என்பவற்றைச் சேர்ந்த வடமாகாண தாதியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மருத்து கலவையாளர்கள் உள்ளிட்டோர் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்று பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு ஆதரவாக வவுனியா வைத்தியசாலையிலும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்றது.

அனைத்து தாதியருக்கும் ரூபா 5000 ரூபாய் இடர் கொடுப்பனவு வழங்குதல், கர்ப்பவதி தாதிய உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை வழங்கல், கோவிட் பரிசோதனை பிரிவில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு போதிய வளங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக நோயா ளர்கள், மற்றும் வழமையான சிகிச்சைக்கு வருவோர் பல் வேறு சிரமங்களை எதிர் நோக்கினர். (அ)

# அமைச்சர் வாசுவுக்கு எதிர்ப்பு

*கொழும்பு, டிசெ. 31*

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு எஹலியகொடவலமுட்ட பிரதேசத்தில் மக்களால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் குடிதண்ணீர்த் திட்டத்தை திறந்து வைப்பதற்காக சென்ற அமைச்சரின் வாகனத்தை போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினர்.

போராட்டக்காரர்கள் அமைச்சரை நோக்கி கூச்சலிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவரது பாதுகாவலர்கள் அவரை வெளியேற்ற முயன்றனர்.

பின்னர் எஹலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததையடுத்து அமைச்சர் திறப்பு விழாவை கைவிட்டு அங்கிருந்து வெளியேறினார். (அ)

# ஐ.நா-வில் கைலாசா...

# மோடியை சீண்டும் நித்தியானந்தா!





ஐ.நா-வில் நித்தியானந்தா முன்வைத்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டு புதியதல்ல.

பல்வேறு வழக்குகள் காரணமாக வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்ற நித்தியானந்தா, ‘கைலாசா’ என்கிற தேசத்தை நிர்மாணித்திருப்பதாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிவித்தார். தெற்கு அமெரிக்காவின் ஈகுவாடார் தீவு அருகே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அந்தப் புதிய தேசத்தை இதுவரை உலக நாடுகள் ஏதும் அங்கீகரிக்க வில்லை. இந்தச் சூழலில், ஐ.நா-வின் சிறுபான்மையினர் விவகாரக் கவுன்சில் கூட்டத்தில் ‘கைலாசா’ பிரதிநிதியாக ஒருவர் பங்கேற்றிருப்பதும், இந்துச் சமூகத்தின் ஒற்றைப் பிரதிநிதியாகத் தன்னை நிலைநிறுத்த நித்தியானந்தா முயற்சி செய்வதும் பரபரப்பைப் பற்ற வைத்திருக்கிறது.


வரும் ஜனவரி 3 ஆம் திகதி, நித்தியானந்தாவின் பிறந்த நாள் கொண்டாடப் படவிருக்கும் நிலையில், ‘கைலாசா’ தொடர்பான சர்ச்சை மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது!

உலகெங்கும் சிறுபான்மைச் சமூகத்தினர் சந்திக்கும் பிரச்னைகள், குறைகள் குறித்துப் பேசுவதற்காக, ஆண்டுக்கொரு முறை ஐ.நா-வின் சிறுபான்மையினர் விவகாரக் கவுன்சில் கூட்டம் நடத்துவது வழக்கம். அந்த வகையில், கடந்த டிசெம்பர் 3ஆம் திகதி ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் 14ஆவது கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கைலாசா தேசத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசியிருக்கும் ஸ்ரீநித்ய மோக்ஷப்ரியானந்தா என்பவர், “இந்தியாவில் இந்துக்களுக்கும் அவர்களின் வழிபாட்டு முறைகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. நித்தியானந்தா போன்ற இந்து மதக் குருமார்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. மீடியாக்கள் மூலமாகப் பொய்யான செய்திகளைத் திட்டமிட்டே பரப்புகிறார்கள்” என்று வெடித்துத் தீர்த்திருக்கிறார்.

இந்தப் பேச்சு, ஐ.நா-வின் இணைய தளத்திலும் நேரடியாக ஒளிபரப்பப் பட்டது. நித்தியானந்தா மீது ‘இன்டெர்போல்’ அமைப்பு ‘ப்ளூ கார்னர்’ அறிவித்தலை வழங்கியிருக்கிறது. அவர் இருப்பிடம் பற்றிய தகவல் தெரிந்த உலக அரசுகள், இன்டெர்போலிடம் தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்பது அந்த அறிவிப்பின் சாரம்சம். இந்தச் சூழலில், ‘கைலாசா’ நாட்டின் பிரதிநிதியாக ஒருவர் ஐ.நா-வரை சென்றிருப்பது பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது.

இதுகுறித்து நம்மிடம் பேசிய நித்தியானந்தா வின் முன்னாள் சிஷ்யர்கள் சிலர், “ஐ.நா-வில் நித்தியானந்தா முன்வைத்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டு புதியதல்ல. ‘இந்தியாவில் இந்துக் களுக்குப் பாதுகாப்பு இல்லை, இந்து மதச் சடங்குகளைக் கடைப்பிடிக்க பல்வேறு தொந்தரவுகள் நிலவுகின்றன’ என்று 2018, 2019ஆம் ஆண்டுகளிலேயே ஐ.நா-வுக்குப் புகார் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

இந்தியாவிலிருந்து தலைமறைவான பிறகு, கடந்த ஜூலை மாதம் ஐ.நா நடத்திய ‘பெண்களுக்கு எதிரான குற்றங்கள்’ கூட்டத்திலும் ‘கைலாசா’ சார்பில் பங்கேற்று, இந்தியாவில் தன் ஆசிரமத்தைச் சேர்ந்த பெண்கள் தாக்கப்படுவது குறித்துப் புகார்களை முன்வைக்க வைத்தார். தற்போது, ஐ.நா. அரங்கத்துக்குள்ளேயே அமர்ந்து பேசும் அளவுக்குத் தன் ஆட்களை அனுப்பி வைத்திருக்கிறார்.




ஐ.நா-வில் ‘கைலாசா’ சார்பில் பேசியிருக்கும் மோக்ஷப்ரியானந்தா சென்னையைச் சேர்ந்தவர் தான். மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவரின் தூரத்து உறவினரான இவர், இன்ஜினீயரிங் முடித்ததும் நித்தியானந்தாவுடன் சேர்ந்து கொண்டார். வெளிநாட்டுப் பக்தர்களைக் கையாளும் பொறுப்பு இவரிடம் அளிக்கப்பட்டிருந்தது. தற்போது நித்தியானந்தா தலைமறை வாகிவிட்டதால், நித்தியானந்தாவின் வெளி நாட்டுத் தொடர்புகளை மோக்ஷப்ரியானந்தாதான் கவனித்துக்கொள்கிறார். ஐ.நா நடத்தும் இப்படியான சிறு கூட்டங்களில், எந்த அமைப்புகள் வேண்டுமானா லும் பங்கேற்கலாம். திபெத், தைவான் போராட்டக் குழுவினர்கூட இப்படி பல்வேறு கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.

தங்களது போராட்டங்கள், அமைப்பின் முகவரி, சர்வதேச அங்கீகாரம் இவற்றைக் காட்டினாலே ஐ.நா-வின் அரங்கத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். அந்தவகையில்தான், ‘கைலாசா’ தேசத்துக்கும் வாய்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. அதை ஒரு நாடாக ஐ.நா அங்கீகரிக்கவில்லை. ஓர் அமைப்பாகத்தான் அங்கீகரித்திருக்கிறது.

இந்தியாவிலிருந்து தான் விரட்டப்பட்டதற்கு ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அமைப்புகள் எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை, தனக்கு ஆதரவாகப் பேசவில்லை என்கிற கோபம் நித்தியானந்தாவுக்கு உண்டு. இதனால்தான், ‘பா.ஜ.க அரசில் இந்துக்களுக்குப் பாதுகாப்பில்லை’ என்று சர்வதேச அமைப்புகளிடம் புகார்களைத் தட்டிவிடுகிறார் நித்தி. வாரணாசியில் காசி கைலாசநாதர் ஆலயத்தைத் திறந்து வைத்தும், கேதர்நாத்தில் ஆதி சங்கரரரின் சிலையை நிறுவியும், இந்து மதத்தின் ஒற்றை அடையாளமாக சர்வதேச அளவில் தன்னை முன்நிறுத்துகிறார் பிரதமர் மோடி. அவருக்குப் போட்டியாக, ஐ.நா-வில் புகாரளித்து தன்னை இந்து மதத்தின் ஒற்றைப் பிரதிநிதியாக நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறார் நித்தி.

வரும் ஜனவரி 3ஆம் திகதி, தன்னுடைய பிறந்தநாளையொட்டி கனடாவின் டொரன்டோ நகர் மேயர் ஜான் டோரியிடமிருந்தும், அமெரிக்காவின் ஃபுல்லர்டோன் நகர் மேயர் ஃப்ரெட் ஜூங்கிடமிருந்தும் வாழ்த்து பெற்று, தனக்கு சர்வதேச அங்கீகாரம் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்க முயல்கிறார். ஐ.நா-வில் மோக்ஷப்ரியானந்தா முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுகள், மார்ச் 2022 இல் நடைபெறும் ‘மனித உரிமைக் கவுன்சில்’ கூட்டத்தில் விவாதத் துக்கு எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது. அப்படி நிகழும் பட்சத்தில், பல்வேறு கேள்விகளுக்கு இந்திய அரசு பதில் சொல்ல வேண்டிய நெருக்கடி உருவாகும்” என்றனர்.

இந்தியாவிலிருந்து தான் விரட்டப்பட்டதற்கும், அதற்குப் பிறகு தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும், ‘ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அமைப்புகள் எந்த விதமான உதவியும் செய்யவில்லை’ என்கிற கோபத்திலிருக்கும் நித்தியானந்தா, “இந்துச் சமூக வாக்குகளை வைத்துதானே இவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். இவர்களின் முகத்திரையை இந்துக்களிடம் கிழிக்கிறேன்” என்று தன் சகாக்களிடம் சவால்விட்டிருக்கிறாராம். அதன் ஒரு பகுதிதான், ஐ.நா சிறுபான்மையினர் கவுன்சில் கூட்ட விவகாரம் என்கிறது விவரமறிந்த வட்டாரம். இன்னும் என்னென்ன கூத்துகளெல்லாம் அரங்கேறக் காத்திருக்கிறதோ?

- விகடன்

# டான் சாதனைத் தமிழர் விருதாளர் சாஜிராணி

**இன்று தனது தொழில்முயற்சியில் வளர்ச்சி பெற்று தன்னை ஒத்த 17 பெண்தலைமைத்துவ மற்றும் மாற்று வலுவுள்ள மகளிருக்கு வேலை வாய்ப்பை வழங்கி தனது நிறுவனத்தை ஒரு முன்மாதிரியான நிறுவனமாக வளர்த்தெடுத்துள்ளார். இவரது 60 வகையான உற்பத்திகளில் 15 இற்கும் மேற்பட்டவை புலம்பெயர் தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன என்பதும் பெருமைகொள்ளத்தக்கதாகும்**



பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - இன்று எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லைக் காண் என்று கும்மியடி என்றார் மகாகவி. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக தானும் திகழ்ந்து தனது ஊழியர்களையும் தன்வழியில் ஊக்குவிக்கின்ற முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுயதொழில் முனைவர் சாஜிராணி கிருஸ்ணதாஸ் அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை வழங்குவதில் டான் குழுமம் மகிழ்வடைகின்றது.

**தொடக்க வாழ்வு**

22.06.1979 இல் முல்லைத்தீவு குமிழ முனையில் பிறந்த இவர் குடும்பத்தில் உள்ள ஐந்து பெண்பிள்ளைகளுள் மூன்றாவது பிள்ளை. தந்தை குணநாதன் 1980களின் பிற்பகுதியில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் இறந்துவிட - தாய் சின்னம்மா கச்சான் வியாபாரம் மேற்கொண்டு பிள்ளைகளைக் காப்பாற்றும் நிலைமைக்குள் சாஜிராணியின் குடும்பம் சிக்குண்டது. போர் நிலைமைகளால் சாஜிராணி குடும்பத்தினர் குமிழமுனையில் இருந்து புதுக்குடியிருப்புக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்தனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 10 ஆம் ஆண்டுவரை கல்வி கற்ற சாஜிராணி தொடர்ந்து கல்வியைத் தொடர முடியாத வறுமைச் சூழலில் படிப்பை நிறுத்திக் கொண்டார். திருகோணமலையைச் சேர்ந்த கனகலிங்கம் கிருஸ்ணதாஸ் என்பவரை மணந்து ஒரு ஆண்பிள்ளையையும் பெற்றெடுத்தார். கணவர் கிருஸ்ணதாஸ் 2009 இல் இந்த மண்ணிற்காக மரணிக்கும் சூழ்நிலைக்கு உள்ளானார்.

போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வை எதிர் கொண்டு வவுனியா ஆனந்தகுமாரசாமி முகாமில் தஞ்சமடைந்த சாஜிராணி தனது வாழ்வாதாரத்திற்காக சிறிதளவில் அப்பம் சுட்டு விற்பனை செய்யத் தொடங்கினார்.

அதற்காக அவர் அப்பச் சட்டியையும் ஏனைய மூலப் பொருள்களையும் மிகவும் கடினப்பட்டே பெற்றுக் கொண்டதாகக் கூறுகின்றார். தனக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களைத் தான் பயன்படுத்தாது விற்பனை செய்தமையால் பெற்ற பணமே அப்பத் தொழிலுக்கான முதலீடாக அமைந்தது.

**வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை**

மீண்டும் புதுக்குடியி ருப்பில் மீளக்குடியேறிய பின்னர் உணவுப் பார்சல் தயாரித்து விற்பனை செய்ய முயன்றார். அதிலும் போதிய வருவாய் ஏற்படாத நிலையில் - ஏதாவது வித்தியாசமாக முயற்சி செய்து வணிக முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று தலைப்பட்டார். மற்றையர்களைவிட வித்தியாசமாகச் சிந்திப்பவர்களிடமே வெற்றி எளிதாகும் என நம்பினார்.

வல்லாரை இலைகளைப் பயன்படுத்தி குழந்தைகளிடம் பிரபலமான ரிபிரிப் (Tipi Tip) தயாரிக்கலாம் என முயன்றார். ஆனால் அதற்குரிய பொறிமுறைத் தொழினுட்பம் தெரியாத நிலையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். ஒரு நிலையில் வல்லாரையில் ரிபிரிபி தயாரிக்கும் பொறிமுறையைத் தானாகவே கற்றுக் கொண்டார். இதுவே பின்னர் வல்லாரைப் பப்படம், வல்லாரை சத்துமா என பல்வேறு தயாரிப்புகளாக பரிணாமம் பெற்றது.

2014 இல் கண்டியில் இடம்பெற்ற கைத்தொழில் கண்காட்சியில் சாஜிராணியின் சதுஸ்ரார் உற்பத்திகள் காட்சிப் படுத்தப்பட்டன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினரின் வழிகாட்டலில் சாஜிராணி இதில் பங்கேற்று வல்லாரைப் பப்படத்திற்காக முதற்பரிசைப் பெற்றுக்கொண்டார் இதற்காக அவருக்கு வழங்கப்பட்ட அமெரிக்க பயணப் பரிசை நிராகரித்துத் தனது தொழில் முயற்சிக்காக புதுக்குடியிருப்பில் நிலம் வழங்கி உதவுமாறு மேடையிலேயே வேண்டிக் கொண்டார். அந்த வேண்டுகோள் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தரவால் உடன் நிறைவேற்றப்பட்டது.

**முன்மாதிரியான தொழிலதிபர்**

இன்று தனது தொழில்முயற்சியில் வளர்ச்சி பெற்று தன்னை ஒத்த 17 பெண்தலைமைத்துவ மற்றும் மாற்று வலுவுள்ள மகளிருக்கு வேலை வாய்ப்பை வழங்கி தனது நிறுவனத்தை ஒரு முன்மாதிரியான நிறுவனமாக வளர்த்தெடுத்துள்ளார். இவரது 60 வகையான உற்பத்திகளில் 15 இற்கும் மேற்பட்டவை புலம்பெயர் தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன என்பதும் பெருமைகொள்ளத்தக்கதாகும். இவரது உற்பத்திகளின் பெருமைகளை உணர்ந்த இந்தியப் பிரபல தொழிலதிபர் அம்பானி இந்த ஆண்டு இவரை அழைத்து தொழில் விரிவாக்கம் குறித்துப் பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

உற்பத்தியில் தொழிலாளர் - விநியோகத்தில் லொறிச் சாரதி - இயந்திர இயக்கலில் பொறியாளர் - எனப் பன்முகப்பட்ட ஆளுமையுடன் திகழ்கிறார் சாஜிராணி. புலம்பெயர் உறவுகளைக் கடந்து வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கான ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழைப் பெறுவதற்குத் தற்போது எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கின்றார் இந்தச் சாதனை மங்கை.

வாழ்க்கையில் உயர்ச்சி பெற்றுச் சாதிக்கத் துடிக்கும் பலருக்கும் முன்மாதிரியாக விளங்கும் சாஜிராணிக்கு இந்த ஆண்டுக்கான சாதனைத் தமிழர் விருதைக் கையளிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம். ஏற்கனவே இந்த விருதை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ( 2018 கலாநிதி மரியசேவியர் அடிகள் (2019 பேராசிரியர் சி.மௌனகுரு (2020 ஆகியோர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ■

**சாதனைத் தமிழர் விருதுக்குழு சார்பில்**
**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**



# 21 ஆவது ஆண்டில் டான் தொலைக்காட்சி

## எனது இதயத்தின் ஆழத்திலிருந்து...



21 வருடங்களில், ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் DAN என்ற மூன்றெழுத்து பெயரை பதித்த பெருமைக்குரிய மனிதனாக இன்று நான் நிற்கிறேன்.

2022 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினமானது எனது காட்சி ஊடக வாழ்க்கையின் வெள்ளி விழா ஆண்டாக இருந்தாலும், கடந்த 21 வருடங்களாக DAN குழுமத்தின் தலைவராக இருந்து நான் பயணித்ததே, ஒரு கடினமான நீண்ட பயணம்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 'டிஆர்டி தமிழ் ஒளி' நிறுவனத்தை நான் தொடங்கிய போது -

அது அந்த நாட்டிலே ஒரு வரலாறு என்பதோ, அல்லது அது இன்னொரு வரலாற்றுப் படைப்பின் தொடக்கம் என்பதோ எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

எனது தொலைக்காட்சி, தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி - 'டிஆர்டி தமிழ் ஒளி'யை, பிரான்ஸில் தொடங்கப்பட்ட முதலாவது பிரெஞ்சு மொழி அல்லாத தொலைக்காட்சி என்று பெருமையுடன் பதிவு செய்தது 'லெ பிகாரோ' என்ற பிரான்ஸின் முன்னணி செய்தித்தாள்.

இருப்பினும், மில்லினியம் ஆண்டில், எனது டிஆர்டி தொலைக்காட்சி தந்திரமாக என்னிடமிருந்து பறிக்கப்பட்டபோது, நான் தனித்து விடப்பட்டேன்.

இருந்தபோதிலும், மீள வலுவூட்டப்பட்டவனாக மீண்டு எழுந்து - சவால்களை எதிர்கொண்டு, DAN நிறுவனத்தை நான் உருவாக்கினேன். மற்றுமொரு வரலாற்றுப் படைப்பு யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்டது.

எனது தாயகத்தில் நிறுவப்பட்ட, தனியாருக்குச் சொந்தமான முதலாவது தொலைக்காட்சி நிறுவனமாக எனது DAN நிகழ்ந்தது.

DAN என்ற இந்த நாமத்தை நிலைநிறுத்த - நான் எதிர்கொண்ட சவால்களும், அந்தச் சவால்களை முறியடிக்க நான் நடத்திய போராட்டமும், தமிழன் ஒருவனின் மற்றொரு மகத்தான வெற்றிக் கதை.

அந்த வரலாற்றை உங்கள் அனைவருக்கும் விபரிக்கும் வாய்ப்பு வரும் வரை - இந்த நெடும் பயணத்தில் என்னுடன் தோள்தந்து நின்ற அனைவருக்கும், எனது இதயத்தின் ஆழத்திலிருந்து, நன்றியை மட்டுமே இப்போது என்னால் தெரிவித்துக் கொள்ள முடியும்.

**எஸ்.எஸ்.குகநாதன்**
*தலைவர், டான் ஊடகக் குழுமம்.*

## புலம் பெயர் தமிழ் மக்களுக்கும் ஓர் ஒளியாக விளங்கும் டான்



கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும், புலம் பெயர் தமிழ் மக்களுக்கும் ஓர் ஒளியாக இந்த டான் நிறுவனம் செயல்பட்டு வந்திருக்கின்றது.

நான் கடந்த காலங்களில் வெளிநாடுகளில் வாழ்ந்த காலங்களில் கூட இலங்கையின் பல செய்திகளை உடனுக்குடன் எமக்கு கிடைப்பதற்கு, அல்லது உடனுக்குடன் நாங்கள் பார்ப்பதற்கு டான் தொலைக்காட்சியைத்தான் நாங்கள் கொண்டாடுவோம்.

டான் தொலைக்காட்சி இந்த 20 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் எமது மக்களுக்கு பாரிய சேவையை வழங்கி வருகிந்திருக்கின்றது. சுடச்சுட செய்திகளை மட்டுமல்ல எத்தனையோ அரசியல் களங்கள் அதாவது அரசியல் விவாதங்கள், கருத்துப் பரிமாறல்கள், இவ்வாறான பலவிடயங்களை எமது மக்களுக்கு தந்தது, தந்துகொண்டிருக்கின்றது.

தொடர்ந்து டான் குழுமம் இந்த சேவையை எமது தமிழ் மக்களுக்கு மிகவும் சிறப்பாக வழங்கும், வழங்க வேண்டும் என வாழ்த்தி இந்த புதுவருடத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சி.தவராசா**

## டான் தொலைக்காட்சியின் வளர்ச்சி பிரமாண்டமானது



டான் பிரபல்யமான தொலைகாட்சி அலைவரிசைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

ஓம் தொலைக்காட்சி, பிறை தொலைக்காட்சி, புனித மேரி தொலைக்காட்சி மற்றும் யாழ் தெலைக்காட்சி போன்ற சமய சார்பான பல்வேறுபட்ட அலைவரிசைசளை, விசேட தினங்களில் நேரடி ஒளிபரப்புடன் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை கல்வி அலைவரிசையிலும் மற்றும் களியாட்ட நிகழ்வுகளையும் கொண்டுள்ளது.

குகநாதனின் வழிகாட்டலில், டான் தொலைக் காட்சியின் வளர்ச்சியானது பிரமாண்டமானது. அர்ப் பணிப்பான சேவைக்கு டான் தொலைக்காட்சியின் ஒட்டுமொத்த அணிக்கும். இந்த பணியை மேலும் தொடர குகநாதன் ஆரோக்கியமான வாழ்விற்கு எனது நல்வாழ்த் துக்கள்.

**ஜீவன் தியாகராசா**
*வடமாகாண ஆளுநர்*

## ஊடக சேவையினை நடுநிலையயாக செயற்படுத்தும் டான்



21ஆவது ஆண்டில் காலடி வைக்கும் டான் ரீவி குழுமத் திற்கு வாழ்த்துகள் தமிழர்களின் தொலைக்காட்சியாக ஆரம்பித்து இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது உலகத் தமிழர்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்து இன்று 21ஆவது ஆண்டில் காலடி வைக்கும் டான் ரீவிக்கு மன மார்ந்த பாராட்டுக்கள்.

கடந்த இருபது வருடமாக பல இன்னல்களிற்கு மத் தியில் தனது ஊடக சேவையினை நடுநிலையாக செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். குறிப்பாக கொரோனா காலத்தில் தங்கள் கல்விச்சேவை ஊடாக எங்கள் மாணவர்களின் கல்விக்காக அரும்பெரும் பணியாற்றியுள்ளார்கள்.

**எம்.ஏ, சுமந்திரன்**
*ஜனாதிபதி சட்டத்தரணி*
*பாராளுமன்ற உறுப்பினர்*

## அனைத்து தரப்பின் கருத்துக்களுக்கும் களம் அமைக்கும் தொலைக்காட்சி



ஒரு தமிழர் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகளாவிய ரீதியில் சிறப்பானதோர் ஊடகமாக டான் தொலைக்காட்சியை 21 ஆண்டுகள் நடத்துகின்றமை பெருமையான விடயம்.

ஊடகம் ஒன்றை நடுநிலையாக நடத்துவதென்பது இலகுவான காரியமல்ல. அதுவும் பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளுடைய பல தரப்புக்கள் உள்ள நாட்டில் அனைத்து தரப்பின் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்துகின்ற அல்லது களமமைத்துக் கொடுக்கின்ற ஊடகமாக டான் தொலைக்காட்சி மிளிர்கின்றது.

எமது தமிழ் அரசியல் தரப்புக்களை மட்டுமின்றி சிங்கள, முஸ்லிம் அரசியல் தரப்புக்களுக்கும் ஒரு ஊடகமாக டான் தொலைக்காட்சி பல சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

டான் தொலைக்காட்சி தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியில் பல சாதனைகளைப் படைத்து இன்னும் பல உச்சங்களைத் தொட எமது மக்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.சித்தார்த்தன்**
*பாராளுமன்ற உறுப்பினர்.*

## வடக்கு, கிழக்கின் முதன்மைத் தொலைக்காட்சி



டான் தொலைக்காட்சி அதன் இருபத்தியோராவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு வதையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி.

2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மண்ணில் முதலாவது தொலைக் காட்சி நிறுவனமாக ஆரம்பித்த டான் தொலைக்காட்சி இன்றும் வடக்கு மாகாணத்தின் முதன்மைத் தொலைக்காட்சி நிறுவனமாக திகழ்கிறது.

நாட்டின் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு அதன் சேவைகளை விஸ்தரித்தது மட்டு மன்றி பல ஐரோப்பிய நாடுகளிலும் அதன் ஒளிபரப்புச் சேவை வியாபித்துள்ளமை அதை ஓர் உலகளாவிய தொலைக்காட்சிகளில் ஒன்றாக வளர்ச்சியடைந்தமை பெருமைக்குரியது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு, கொழும்பு போன்ற நகரங்களில் அதன் கலையகங்களை நிறுவி உள்ளூர் கலைஞர் களை ஊக்கு விப்பது ஒரு தமிழ்த் தேசிய இனம் சார்ந்த சேவையாகவே காணலாம்.

கல்வித் தொலைக்காட்சியுடன் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஒளிபரப்பு அலைகளையும் உருவாக்கியுள்ளமையும் பாராட்டுக்குரியதே.

டான் தொலைக்காட்சியின் ஸ்தாபகர் எஸ்.எஸ். குகநாதன் அவர்களை, அவர் புகழ் பெற்ற ஈழநாடு பத்திரிகையில் பணிபுரியும் காலத்திலிருந்தே அறிவேன். அவர் ஒரு சிறந்த ஆற்றலுள்ள தொழில்முனைவோராவார். தனது ஊடக வாழ்க்கையின் ஆரம்ப நிறுவனமான ஈழநாடு பத்திரிகையின் நினைவைப் பிரதிபலிக்கும் அதேபெயரில் ஒரு பத்திரிகையை ஸ்தாபித்து வெளியிடுவதும் பாராட்டுக்குரியது.

குகநாதனுக்கும் டான் தொலைக்காட்சியின் பல்வேறு பணித் தொகுதியினர்க்கும் எமது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*அவைத் தலைவர்*
*வடக்கு மாகாண சபை.*

## தாயகத் தமிழரின் வாழ்வியல் செல்நெறியைத் தீர்மானிக்கவல்ல ஊடகமாக டான்



தாயகமண்ணின் தனித்துவ அடையாளங்களை வெளிக் கொணரும் முதன்மைத் தொலைக் காட்சியாக டான் தொலைக்காட்சி திகழ்கின்றது. 2000 ஆம் ஆண்டில் பிரான்ஸில் பிரசவமாகி யாழ்ப் பாணத்தில் பெருவளர்ச்சி கண்ட டான் குழுமம் - இன்று என் போன்ற தாயகக் கலைஞர்களுக்கு உலகளாவிய அடையாளத்தை நல்கி வருகின்றது.

வளரிளம் பேச்சாளர்களை ஊக்குவிக்கும் களமாக பணிப்பாளர் அவர்களால் உருவாக்கப்பட்ட சொற்சமர் நிகழ்ச்சி பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருவதோடு டான் தொலைக்காட்சியில் அதிகளவு இரசிகர்களை ஈர்க்கும் நிகழ்ச்சியாகவும் இருந்து வருகின்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பணிப்பாளர் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்தையும் - பேசுபொருள் குறித்துப் பின்னால் நேரும் இடர்களைத் தனக்காக்கிக் தாங்கிக்கொள்ளும் தன்மையையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இதுவே டான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குக் கிடைக் கும் வெற்றிக்கான மூலகாரணம் என்பேன்.

தமிழ் மக்களின் இருப்பையும் இனிவருங்காலச் செல்நெறியையும் கோடிகாட்டவல்ல தகைமைப்பாடுள்ள ஊடகமாக டான் குழுமம் தன்னைத் தகவமைத்துள்ளது. வரலாற்றில் அது தன் காலக்கடமையை நிறைவேற்றும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை என்னிடம் உள்ளது.

இருபத்தோரகவைகாணும் இன்றமிழ்த் தொலைக் காட்சிக்கு இனிதான நல்வாழ்த்துகள்.

**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**
*பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை*
*"தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்*

# 21 ஆவது ஆண்டில் டான் தொலைக்காட்சி

## பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் டான்



டான் தொலைக்காட்சியின் 21ஆம் ஆண்டு நிறைவு நாளில் மேலும் பல சாதனை படைத்து வளர மனமார வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சிய டை கின்றேன்.

அரசாட்சியின் ஸ்திரதன்மைக் கும், செங்கோல் ஆட்சிக்கும், ஊடகம் அரசாட்சியின் கதிரை இருப்புக்கு பெரும் பங்காற்றுகின்றமை யதார்த்தமா னது. அரசின் நான்காவது இடமாக இருக்கின்ற ஊடகத்துறையில் இலத்திரனியல் ஊடகம் பெரும் பங்காற்றுகின்றமை சிறப்புக்குரியது. இவ்வகையில் டான் தொலைக் காட்சியம் தனது பணியை செவ்வனே நிறைவேற்றி இன்று 21ஆவது ஆண்டு நிறைவில் காலூ ன்றி கால் நூற்றாண்டை அண்மித்து நிற்பது பெருமைக் குரிய ஆனந்தமாக தலைநிமிர்ந்து மிடுக்கோடு வரலாற் றுப்பதிவோடு நிற்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மொழிகளில் பதாகைகளானதும், செம்மொழி களாகவும் இனிமையானதும், கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் எக்காலத்திலும் உயிரோட்டமாக வுள்ள தமிழ் மொழியில் டான் மிளிர்ந்து நிற்பது உலகம் வாழ் தமிழர்களுக்கு பெருமை சேர்த்து நிற்கின்றது.

இதனைவிட தமக்கான ஒரு தேசத்தினை வேண்டி தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங் களை பாதுகாக்க வேண்டி நிற்கும் ஒரே தேசத்தில் அதுவும் இந்து மதத்தினை பேணிப் பாதுகாக்கும் தனது பணியை வியாபித்து நிற்கும் டான் தொலைக்காட்சி சிறப்பான இடத்தில் உயர்ந்து நிலைத்து விட்டது.

யாராலும் எப்போதும் எவராலும் இவ்வாறான வற்றினை அழித்துவிட முடியாத நிலைபேறான இடத்தில் இடம்பிடித்து விட்டது. உலகத்திற்கு தமிழர் தம் வாழ்வியலை பறைசாற்றி அச்சுஊடகத்துறையில் முதலாவதாகவும் முன்னிலை வகிப்பதுமாகிய ஊடகத்தில் 1966ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் இவ் நிறுவனத்தின் குகநாதன் நிர்வாகி அவரின் வழிகாட்டலில் இணைந்து பணியாற்றியவன் என்ற அடிப்படையில் தமிழ்த் தம் பெரியார் காலங்களில் முழுமையாக எழுத்துத்துறை யூடாக அர்ப்பணித்த நிர்வாகி ஒருவர் இலத்திரனியல் ஊடகம் ஒன்றினூடாக முன்னர் விட்டுச் சென்ற சொல்லமுடியாத கருத்துக்கூற முடியாத கருத்துப் பொக்கிஷங்களை காலத்தின் கண்ணாடி போல் இன் றைய காலத்தினூடாக வெளிக் கொணர்ந்து செல்வது கண்கூடு டான் பல்லாண்டு காலம் பயணிக்க எனது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.

**முருகர் கதிரவேலு**
ஈழநாடு லிமிடெட், முன்னாள் பணியாளர்.

## தனித்துவமான காட்சி ஊடகமாக டான்



தமிழ் ஊடகப்பரப்பில் 21 வருடங்கள் என்பது மிகவும் அபாரமான சாதனை. ஊடகங் கள் பெருமளவில் பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்தில் ஒரு தனித்துவமான காட்சி ஊட கமாக டான் தொலைக்காட்சி தன்னை நிலைநிறுத்தியிருக் கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு உடனடி செய்திகளை மட்டுமின்றி உற்சாகமளிக்க கூடிய நிகழ்சிகள் பலவற்றையும் வழங்கிவருவது சிறப்பான விடயமாகும்.

டான் தொலைக்காட்சியானது நிகழ்ச்சிகள் பலவற்றை நடுநிலையாக வழங்குவதோடு அனைத்து தரப்பு அரசியல் பிரமுகர்களுக்கும் களம் அமைத்து கொடுக்கின்றது.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட டான் தொலைக்காட்சியின் ஊடகப்பயணம் பலநூறாண் டுகள் தாண்டியும் தொடர எனது வாழ்த்துக்களை தெரி விக்கின்றேன்.

**பா.கஜதீபன்**
முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்.

## காலத்தில் தேவை அறிந்து களப்பணியாற்றும் Dan குழுமம்



யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி குழுமமான Dan தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 21 வருடங்களாக தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.

டான் தமிழ், டான் செய்திகள், டான் இசை என்பன உட்பட பல தொலைக்காட்சி அலைவரிசைகளை மக்களின் மனம் அறிந்து அவர்களுக் கான சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களையும், பயனுள்ள தகவல்களையும் வழங்குவதில் இதற்கு ஈடு இணையில்லை.

முக்கியமாக ஒவ்வொரு மதத்தினரதும் ஆன்மிகத் தையும் சமய செயல்பாடுகளையும் மக்களிடத்தில் கொண்டு சென்று தனது ஆன்மீக பணியினையும் நிறை வேற்றி வருகின்றது.

உள்ளூர் கலைஞர்களுக்கு அவர்களது திறமைகளை உலகலாவிய ரீதியில் வெளிப்படுத்துவதற்காக வாய்ப்புக் களை வழங்கி அவர்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதோடு தொலைக்காட்சி துறையில் ஆர் வமுள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் வழங்கி, அவர்கள் மேலும் அத்துறையில் வளர்வதற்கான சந்தர்ப் பங்களையும் ஏற்படுத்தி கொடுக்கின்றமையும் பாராட் டத்தக்கது.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் உள்ளூர் அர சியல் பிரமுகர்கள் அவர்களது எண்ணங்கள், கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான சிறந்த களத்தை பக்கச்சார்பின்றி அமைத்துக் கொடுத்து மக்களை அரசியல் மயப்படுத்துகின்ற பல செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றமை காலத்தின் தேவை அறிந்த செயல்.

தொலைக்காட்சி சேவைக்கு அப்பால் மக்கள் இடர் படும் வேளைகளில் அவர்களது இடர் அறிந்து உதவிகள் வழங்கி வருகின்றமையும் பாராட்டப்படவேண்டியது.

மேலும் இப்பணி தொடர எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வி.மணிவண்ணன்**
முதல்வர் மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## வெளிநாடுகளில் தாயக நிகழ்வுகளை அறிய டான்



டான் தொலைக்காட்சி ஆரம்பிக் கப்பட்டு, 21ஆவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே டான் தொலைக் காட்சி சேவைக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக தொலைக்காட்சிகள் எண்பதுகளிலே ஆரம்பித்தாலும் அதைத் தொடர்ந்து பல்வேறு போர்க் காலத்திலும் சிலசில சிறுசிறு தொலைக்காட்சி சேவைகள் நடத்தப்பட்டாலும் கூட பரந்துபட்ட அள விலே பாரிய அளவிலே நடத்தப்பட்ட உள்ளூர் தொலைக் காட்சி சேவை என்றால் அது யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்க ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொலைக் காட்சி டான் தொலைக்காட்சிதான்.

அது இலங்கைத் தீவில் மாத்திரம் அல்ல சர்வதேச ரீதி யாக வெளிநாடுகளில் பார்க்கக்கூடிய வகையிலே உடனுக் குடன் தாயக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளக்கூடிய விதத்திலே எங்களுடைய நேயர்களுக்கு பலருக்கும் அது உதவியாக இருந்தது.

இப்போது அது பல்வேறு பரிமாணங்களைப் பெற்று, டான் குழுமமாக நெருக்கடி கால கட்டங்களிலே உதவிப் பணிகளை செய்வது போன்ற, அதைப்போல பல கலை களை முன்னேற்றக்கூடிய அரசியல் விவாதங்கள் என்று பல்வேறு பரிமாணங்களிலே இந்த தொலைக்காட்சி சேவை விஸ்தரிக்கப்பட்டு வளர்ந்து வருகிறது. அதிலும் தென்னிந்திய தொலைக்காட்சி மோகத்திலே மூழ்கியிருந்த எங்களுடைய மக்களை மீட்பதிலே வெற்றிக்கண்டது.

தொலைக்காட்சிக்கு மேலும் பல ஆண்டுகள் இன்னும் சேவைகள் சிறப்பாக செய்யப்பட வேண்டும் என்று இந்த குழுமத்தினுடைய பணிப்பாளர் நாயகம் அதேபோல மற்ற பணியாளர்கள் அத்தனைபேருக்கும் எங்களுடைய வாழ்த் துக்களை தெரிவிப்பதோடு நேயர்களுக்கும் எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவாஜிலிங்கம்**

## டான் தொலைக்காட்சி வடக்கு ஊடக வரலாற்றில் ஒரு தனி அத்தியாயம்



டான் தொலைக்காட்சி போருக்குப் பின்னான நமது வட இலங்கை சூழலில் ஏற்பட்ட முக் கிய மாற்றங்களுள் முதன்மையா னதாக குறிப்பிடத்தக்கது ஊடகங் களின் தாக்கங்கள் ஆகும். குறிப் பாக யாழ்ப்பாணத்தை மையப் படுத்திய ஊடகங்களின் செறிவு என்பது போர்க் காலத்தை விட பலமடங்கு அதிகரித்ததாகவி ருந்தது. குறிப்பாக அச்சு ஊடகத்துறையில் இம்மாற்றம் கவனத்துக்குரியதாக மாறியது.

நீண்ட அச்சு ஊடகப் பாரம்பரியம் யாழ்ப்பாண மண்ணுக்கு உண்டு. இருந்தும் தகவல் தொழில்நுட்ப உலகின் சடுதியான முன்னேற்றத்தினால் அச்சு ஊட கங்களுக்கு சமாந்தரமாக அல்லது அவற்றைத் தாண்டி இன்னொருபடி மேலாக இலத்திரனியல் ஊடகங்கள் இன்று பெருவளர்ச்சியடைந்துள்ளன. அவற்றுள் ஒன்றாகத் திகழும் டான் தொலைக்காட்சி பல விதங் களில் முதன்மைக் கவனத்துக்குரியது. குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய முதலாவது தனியார் தொலைக்காட்சி எனும் பெருமை டான் தொலைக் காட்சிக்கு உண்டு. டான் தொலைக்காட்சி யாழ்ப்பாணத் தில் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்கள் நிறைவுற்ற போதும் அதன் முதல் வித்து இருபத்தேழு வருடங்க ளுக்கு முன்னர் பிரான்ஸில் விதைக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயம்.

அதன் ஸ்தாபகராகவுள்ள திரு.எஸ்.எஸ்குகநாதன் நீண்ட ஊடக அனுபவம் மிக்கவர். ஈழநாடு பத்தி ரிகையில் தனது ஊடகப்பயணத்தை மிக இளைய வயதில் ஆரம்பித்த அவர் ஈழத்தமிழ் ஊடகங்களின் இருண்ட காலங்களுக்கூடாகவும் பயணித்தவர். புலம்பெயர்வு வாழ்க்கையை தனிப்பட்ட வாழ்வியல் முன்னேற்றங்களுக்கானதாக கருதாமல் தனது சிந்தைக்கு நிறைவான ஊடகப் பயணத்தை தொடர்வதற்கான தளமாக பாவித்து இன்று ஒரு மிகப்பெரும் ஊடக நிறுவனத்தை உருவாக்கியுள்ளார்.

டான் தொலைக்காட்சி யாழ்ப்பாணத்தை தலைமை யகமாகக் கொண்டபோதும் மட்டக்களப்பு கொழும்பு ஆகிய இடங்களில் துணைக் கலையகங்களை அமைத்து செயற்படும் இலங்கைத் தொலைக் காட்சிகளில் தனித்துவமான இயல்பாகும். டான் தொலைக்காட்சி ஒளிபரப்பும் நிகழ்வுகளும் முழுமையாக அவர்களா லேயே உருவாக்கப்படுகின்றமை மற்றுமொரு தனித்துவ அடையாளமாக நான் காண்கின்றேன். அத்துடன், சர்வதேச ரீதியாக தனது ஒளிபரப்புவீச்சக் கொண்டுள் ளமை ஈழத் தமிழ் உலக ஊடகப் பரப்பில் டான் தொலைக்காட்சிக்கு மட்டும் உரிய திறனாகும்.

எமது பல்கலைக்கழகத்துக்கும் டான் தொலைக் காட்சி பல வகைகளில் பிரயோசனமுடையதொன்றா கவுள்ளது. எமது ஊடகத்துறை மாணவர்களின் பயிற்சிக் களமாகத் திகழ்வதுடன் எமது பட்டமளிப்பு நிகழ்வுகளை முழுமையையும் நேரடியாக இலவசமாக ஒளிபரப்பி வருகின்றமையும் நன்றிக்குரிய செயற் பாடாகும். எமது பல்கலைக்கழகம் சார்ந்த செய்திக ளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

டான் தொலைக்காட்சி தனித்த ஒரு அலைவரிசையாக இல்லாமல் தனது சகோதர அலைவரிசைகளாக பல அலைவரிசைகளை பல்வேறு தளங்களிலும் உருவாக்கி செயல்படுகின்றமை முன்னுதாரணமான செயல் பாடாகும். குறிப்பாக அவர்களது கல்வி அலைவரிசை முதன்முதலாக தொலைதூரக் கல்வி எனும் அடிப் படையில் பத்து வருடங்களாக செயற்பட்டு வருகின்றமை யும் குறிப்பாக கோவிட்-19 இடர் காலத்தின் போது மாணவர்களுக்கு பெரிதும் பயனுடையதாக அமை கின்றமையும் சமூகத்தின் நன்றிக்குரிய செய லாகும்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரதான பணிகளுள் ஒன்றாகவிருப்பது அறிவுப்பரவலாக்கம் மற்றும் சமூக ஈடுபாடு என்பவையாகும். எமது பல்கலைக்கழகத்தின் பல ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் டான் தொலைக்காட்சியின் அலைவரிசைகளில் அடிக்கடி தோன்றி தமது அறிவுப் பரவலாக்கத்தின் வழி சமூக இணைவில் உள்ளமையை நான் நன்கு அறிவேன்.

இருபத்தேழு வருடங் களைத் தாண்டியும் டான் தொலைக்காட்சி பல ஆண்டுகள் பல மடங்கு வீச்சுடன் பயணிக்க எங்கள் பல்கலைக்கழகம் உறைகின்ற பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# 21 ஆவது ஆண்டில் டான் தொலைக்காட்சி

## இதயபூர்வ வாழ்த்துக்கள்



உலகத் தமிழர் மத்தியில் யாழ்ப்பாண நகரிலிருந்து உருவாகி, கருவாகி, நிறைவாகி 21 ஆண்டுகள் வளமாகி இளமைத்துவத்தை அடைந்துவிட்ட "டான் (ரீ. வி.) தொலைக்காட்சி வியாபாகம் 2022 புத்தாண்டில் குகநாதமாய் புத்தாண்டில் பரவசமாய் உணர்வுகளோடு பிறக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. ஆம் எம் தமிழர் வாழ்த்துக்களை இதயத்திலிருந்து சமர்ப்பிக்கின்றோம்.

டான் ரீ.வி ஒன்பது தொலைக்காட்சி அலைவரிசைகளில் மக்கள் ஏற்ற சில மொழிகளில் ஒளி, ஒலியாய் பரப்பி வருவது ஊடக வரலாற்றில் மாபெரும் சாதனையேயாகும். டான் ரீ. வி ஊடக மையத்தின் சொந்தக்காரன் அம்மாபெரும் சாதனைக்கு வித்தாய், வியாபகமாய் மிளிரும் திரு. குகநாதனேதான், என்றாலும் இன்று பலகோடி தமிழ் மக்களோடு சொந்தக்காரனாய் உறவாடி வாழும் தொழிலதிபராய் விளங்குகிறார் என்பது ஒரு வரலாற்றின் படைப்பேயாகும்.

திரு. குகநாதன் நல்லதோர் அசல் தமிழனாய், தமிழுக்கும், தமிழ் பேசுவோருக்கும் தெரிந்தவராய், வாழும் தமிழ்மொழியின், தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கும் உணர்வோடும் செயலோடும் ஒன்றாகி முதன்மை உழைப்பாளராய் வழிகாட்டியாய் வரலாற் றில் நிலை நின்று விளங்கி நிற்கின்றமை போற்று தற்குரியதேயாகும்.

திரு. குகநாதனின் அறிவு, ஆற்றல் ஆளுமை அனைத்தும் மக்களிடத்தில் பெரும் மாண்பை ஏற்படுத்தி வருகின்றமை பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகும். வாழ்க, வளம் பெறுக.

**மாவை.சோ.சேனாதிராசா**
*தலைவர்,*
*இலங்கை தமிழ் அரசுக் கட்சி*

## மக்கள் மனங்களில் அழியாத இடம்பிடித்த தொலைக்காட்சி



தனது வளர்ச்சிப் பாதையில் 21 வருடங்களை நிறைவுசெய்து 22ஆம் ஆண்டில் கால் பதிக்கும் டான் தொலைக்காட்சி குழுமத் தினருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் யாழ். மறை மாவட்ட ஆயராகிய நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். மண்ணில் ஊடகப் பணிகளைஆரம்பித்து தமிழ் மக்களின்தேசிய கட்டுமானப்பணியில்தன்னைஇணைத்துப் பல தளங்களிலும் டான் தொலைக்காட்சி நிறுவனம் அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை செய்திகளாக மக்களிடம் எடுத்துச்செல்வதிலிருந்து மொழி, கலை, கலாசாரம், அரசியல், சமயம் மற்றும் கல்வி சார்ந்த தளங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளை தயாரித்து வழங்குவதுவரை தன் பணிகளை விஸ்தரித்து தமிழ் மக்களின் மனங்களில் டான் தொலைக்காட்சி என்றும் அழியாத இடத்தைப்பிடித்துள்ளது.

இத்தொலைக்காட்சியின் வளர்ச்சிக்கு பின்புலத்தில் உந்துசக்தியாக இருக்கும் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிறுவுநர் திரு. குகநாதன் அவர்களின் விடாமுயற்சியையும் அவருடன் இணைந்துபணியாற்றும் தொலைக்காட்சி குழுமத்தினரின் சேவையையும் நான் இவ்வேளையில் உளமார பாராட்டுகின்றேன். உங்களின் பணி இக்காலகட்டத்தில் மிகவும் முக்கியமானது என்பதனை உணர்ந்து தொடர்ந்தும் விவேகத்தோடு ஞானத்தோடும் செயலாற்றுங்கள்.

இறை ஆசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
*யாழ். ஆயர்*

## டான் குழுமம் நீடூழி வாழ்க!



21ஆவது அகவையில்காலடி எடுத்து வைக்கும் டான் குழுமத்துக்கும், அவர்களது 21 வருட ஊடகப் பணி களுக்கான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

வெறுமனே ஊடகப் பணிகளில் மட்டுமல்லாது டான் குழுமம் அதன் தலைவர் எஸ். எஸ். குகநாதனின் வழிநடத்தலில், சமூகப் பிரக்ஞையுடனான மக்கள் மய சேவைகளிலும், கல்வி, சுகாதாரம், சமூக, பொருளாதார, அரசியல் சார் விடயங்களை தனக்கே உரித்தான பாணியில், சுவைபட உடனுக்குடன் வெளிக்கொண்டுவருவதுடன் அதற்கென சிறப்பான அபிமானிகளையும் உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் கொண்டிருப்பது டான் குழுமத்தின் வெற்றிகளில் முதன்மையானதாகும்.

டான் குழுமம் மேலும் தனது பணியை விரிவாக்கி செழுமையுடன் சுவை குன்றாது மக்கள் நலன் சார்ந்து நீடித்து சேவையாற்றி நீடூழி வாழ பாராட்டுக்களை மாவட்ட செயலாளர் என்ற ரீதியில் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

டான் குழுமம் வாழ்க பல்லாண்டு.

**க. மகேசன்**
*யாழ். மாவட்ட செயலர்*

# இலங்கையர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள அரசின் அறிவிப்பு

**அருண்**

வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்ய எதிர்பார்க்கும் எந்த இலங்கையரும் அத்திருமணத்தைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் 'பாதுகாப்பு தடைநீக்கல் சான்றிதழ்' பெறுவது நாளை முதல் - அதாவது - 2022ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப் பட்டுள்ளமையால் திருமணம் செய்து கொள்ளும் எதிர்பார்ப்பில் இலங்கை வந்துள்ளவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள் ளமை பற்றிய தகவல்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளியாகியவண்ணமுள்ளன.

புதிய பாதுகாப்பு விதிமுறைகளை தவிர்த்துக்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டவர்கள் பலரும் திருமணப் பதிவாளர்களிடம் படையெடுத்துதவருவதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. பெரும் பணத்தையும் பெறுமதியான நேரத்தையும் செலவழித்து திருமணத்திற்காக இலங்கை விஜயம் செய்துள்ள வெளிநாட்டவர்கள் எப்படியேனும் திருமணப் பதிவையேனும் நடத்தி முடித்துவிடவேண்டும் என்ற முனைப்பில் இறுதிக்கட்ட நகர்வுகளில் முனைப்பாக இறங்கியுள்ளதாக அறிய முடிகின்றது.

கொழும்பைச் சேர்ந்த திருமண பதிவாளரொருவர் கருத்துவெளியிடுகையில் 'இலங்கை அரசாங்கம் புதிதாக கொண்டு வந்துள்ள நடவடிக்கை முற்று முழுதாக வெளிநாட்டவர்களையா கட்டுப்படுத்தும் அன்றேல் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட ஆனால் தற்போது வெளிநாடுகளின் பிரஜைகளாக மாறிவிட்டவர்களையும் கட்டுப் படுத்துமா என்பது தொடர்பில் தமக்கே தெளிவற்ற நிலை இருப்பதாக தெரிவித்தார்.

மற்றுமொரு திருமணப் பதிவாளரிடம் வினவியபோது 'இந்த நடைமுறை 2022 ஜனவரி முதலாம் திகதி முதலே அமுலுக்கு வருகின்ற காரணத்தால் திருமணத்திற்காக இலங்கை வந்திருக்கின்றவர்கள் இந்த வருட முடிவிற்குள் எழுத்துமூல திருமணப் பதிவை செய்வதற்கு தாம் ஆலோசனை வழங்குவதாக தெரிவித்தார். எழுத்துமூல பதிவை முடித்துவிட்டு பின்னர் தேவைப் படின் அவர்கள் அடுத்த வருடத்தில் வைபவத்தை எடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட ஜோடிகள் கடந்த சில தினங்களுக்குள்ளாக தமது அலுவலகத்தில் எழுத்துமூல திருமணப்பதிவைச் செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழல் தொடர்பாக பதிவாளர்களும் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

டிசெம்பர் 26ஆம் திகதி வெளியான அறிவிப்பிற்கு அமைய இலங்கைப் பிரஜைகள் வெளிநாட்டவரைத் திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் விசேட பாதுகாப்பு அறிக்கையைப் பெற வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள் வெளிநாட்டவரை திருணம் செய்யும்போது முதலில் வெளிநாட்டவர் தமது நாட்டு பாதுகாப்புப் பிரிவின் சான்றிதழைப் பெற வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர் திருணம் செய்யும் வெளிநாட்டவர் இறுதி அறு மாத காலத்துக்குள் எவ்வித குற்றவியல் குற்றச்சாட்டை யும் எதிர்நோக்கவில்லை என்பது அந்தச் சான்றிதழில் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரஜை அல்லது அவர் சார்பான ஒருவரால் மாத்திரம் அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவில் ஒப்படைக்கப் பட வேண்டும்.

பின்னர் அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவூடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படும்.

பாதுகாப்பு அமைச்சு வழங்கும் அறிக்கைக்கு அமைய பதிவாளர் நாயகத்தினால் திருமணத்திற்கான அனுமதி மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதனையடுத்து திருமணப் பதிவிற்கான அனுமதி கிடைப்பதுடன் இந்தச் சட்டத்திற்கு அமைய மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்திற்கு சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

01. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அதன் பிரதி மற்றும் செல்லுபடியாகும் வீசா

02. வெளிநாட்டவரின் சிவில் நிலைமையை உறுதிப்படுத்தும் அந்நாட்டு சான்றிதழ்

03. பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்

04. வெளிநாட்டவரால் தயாரிக்கப்பட்ட தமது சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கை

05. பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் பிரதி

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் இந்தப் புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயம் வீரசேகர தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் நிதித்தூய்தாக்கலுடன் தொடர்புடைய வெளிநாட் டவர்கள், இலங்கையர்களைத் திருமணம் செய்வதைத் தடுப்பதற்காக புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் மேலும் கூறியிருந்ததாக நியுஸ் பெர்ஸ்ட் செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை ஒருவர் தான் விரும்பும் நபரை திருமணம் செய்து கொள்ள ஏன் வேறொருவரின் அனுமதியை கோர வேண்டும் என சட்டத்தரணி திஷ்யா வெரகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையர்கள் வெளிநாட்டு பிரஜைகளை திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவைப்படும் என்ற அரசாங்கத்தின் புதிய விதிமுறைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் 'எனது பிள்ளைகளும் வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள். ஒரு நாள் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் போது, பாதுகாப்பு செயலாளரிடம் அனுமதி கேட்பதை நான் விரும்பவில்லை. அவர்கள் விரும்பும் யாரையும் திருமணம் செய்து கொள்ள யாருடைய அனுமதியும் தேவையில்லை. தாங்கள் விரும்பும் நபரை திருமணம் செய்து கொள்ள அவர்கள் ஏன் வேறு நபர்களிடம் அனுமதி பெற வேண்டும்?' என கேள்வி எழுப்பினார்.

புதிய நிபந்தனைகள் சட்டவிரோதமானது, சட்டத்திற்கு புறம்பானது. பகுத்தறிவற்றது நியாயமற்றது அபத்தமானது அதிதீவிரமானவை மற்றும் அரசியலமைப்பிற்கு முரணானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் முன்னுரிமையின் அடிப்படையில் விசாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவை அவர் கோரியுள்ளார். 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கூறப்படும் சுற்றறிக்கையை அமுல் படுத்த வேண்டாம் என பதிவாளர் நாயகத்திற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுக்க வேண்டும் எனவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு



# 2021 இல் நடந்த உலகின் சுவாரசிய அறிவியல் நிகழ்வுகள்

தொழில்நுட்பம் வளர, வளர அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் கருத்தாக்கங்களின் வேகமும் அதிகரித்துள்ளன. ஐந்து ஆண்டுகளுக்கு முன் சாத்தியப்படாது என கருதியவை, பல நூற்றாண்டுகளாக கற்பனையில் இருந்த விஷயங்கள் எல்லாம் இன்று மிக எளிதாக அரங்கேறி வருகின்றன.

அப்படி 2021ஆம் ஆண்டில் அறிவியல் உலகில் நடந்த சுவாரசிய நிகழ்வுகள், கண்டுபிடிப்புகள், முயற்சிகளை இங்கே தொகுத்துள்ளோம்.

### பெர்சவரன்ஸ் ரோவர் - செவ்வாயை முத்தமிட்ட மனித முயற்சி




பல்லாண்டுகளாக எட்டாக்கனியாக இருந்த செவ்வாய்கிரகத்தை, இப்போது மனிதர்கள் முத்தமிடும் தொலைவுக்குக் கொண்டு வந்துவிட்டது பெர்சவரன்ஸ் ரோவர்.

நாசாவின் பெர்சவரன்ஸ் ரோவர் வெற்றிகரமாக 2021 ஆம் ஆண்டு பிப்ரவரியில் செவ்வாயில் தரையிறங்கியது. ஆறு சக்கரங்களைக் கொண்ட இந்த ரோவர் வாகனம், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செவ்வாய் கோளின் பாறைகளைத் துளையிடுவது மற்றும் அக்கோளில் முன்பு உயிரினங்கள் வாழ்ந்ததாக கூறப்படும் ஆதாரங்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

'இன்ஜென்யூட்டி' என்றழைக்கப்பட்ட ஹெலிகொப்டர், ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரம் செவ்வாய் கோளில் பறந்தது. அதற்கு முன் மனிதனால் உருவாக்கப்பட்ட கருவி, வேறொரு கோளில் பறக்கவிடப்பட்டதில்லை.

கடந்த செப்ரெம்பர் 6ஆம் தேதி நாசாவின் பெர்சவரன்ஸ் ரோவர் தன் முதல் பாறை மாதிரிகளைச் சேகரித்தது. அடுத்த சில நாட்களில் மீண்டும் இரண்டாவது முறையாக பாறை மாதிரிகளைச் சேகரித்தது. சமீபத்தில் ஜெசரோ க்ரேட்டில் அதன் அடிப்பாறையையே பெர்சவரன்ஸ் சேகரித்துள்ளதாகச் செய்திகள் வெளியாயின.

இதைத்தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில், மொத்தம் 24 பாறை மாதிரிகளைச் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பாறை மாதிரிகள் இந்த தசாப்த காலத்துக்குள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைந்த முயற்சி மூலம் பூமிக்கு கொண்டு வரப்பட உள்ளன.



### சூரியனை உரசிப் பார்த்த 'பார்க்கர் ப்ரோப்'


நாசாவின் பார்க்கர் சோலார் ஆய்வுக்கலன் (Parker Solar Probe), கொரோனா என்றழைக்கப்படும் சூரியனின் புற வளிமண்டலம் வழியாகக் கடந்து சென்றது.இந்த ஆண்டு ஏப்ரல் மாதமே இது நிகழ்ந்திருந்தாலும், விண்கலன் கொரோனா வழியாகத்தான் கடந்து சென்றதா? என்பது தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் சமீபத்தில் தான் உறுதி செய்யப்பட்டது.

அதீத வெப்பம் மற்றும் கதிர்வீச்சை பார்க்கர் விண்கலம் எதிர்கொண்டது. சூரியன் எவ்வாறு இயங்குகிறது என்பது குறித்த புதிய தகவல்களை இதன் மூலம் தற்போது பெற முடிந்துள்ளது.

'சூரியனின் புற வளிமண்டலத்தைத் தொட்டது மனித குலத்தின் மிகப்பெரிய முன்னேற்றம். பூமிக்கு மிக அருகில் இருக்கும் நட்சத்திரமான சூரியன் குறித்தும், அது சூரிய மண்டலத்தின் மீது செலுத்தும் தாக்கம் குறித்தும் அறிந்து கொள்ள உதவும்,' என நாசாவின் சூரிய இயற்பியல் பிரிவின் இயக்குநர் நிக்கோலா ஃபாக்ஸ் தெரிவித்துள்ளார்.

### உயிர்கள் எப்படி பிறந்தன? - விடை காணும் பிரமாண்ட தொலைநோக்கி

பூமியில் தயாரிக்கப்பட்ட தொலைநோக்கிகளிலேயே மிகவும் பெரிய தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி, டிசம்பர் 25ஆம் தேதி பிரான்ஸ் நாட்டின் குவானாவிலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.




இந்த சூப்பர் தொலைநோக்கி பிரபஞ்சத்தை மேலும் ஆழமாக தெரிந்து கொள்ள உதவும்.13.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிரபஞ்சத்தில் ஒளிர்ந்த நட்சத்திரத்தின் ஒளியை இந்த தொலைநோக்கி மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிற கோள்களில் உயிர்கள் உள்ளதா என, இந்த தொலைநோக்கி மற்ற கோள்களின் வளிமண்டலத்தில் உள்ள மூலக்கூறுகள் குறித்து ஊடுறுவி கண்டறியும்.

### வியாழனை நோக்கிப் புறப்பட்ட லூசி - ஏன்?



சூரிய குடும்பத்தின் பிறப்பு ரகசியத்தை அறிய உதவி செய்யும் புதைபடிவங்கள் என்று கருதப்படும் விண்கல் கூட்டத்தை ஆராய வியாழன் கோள் நோக்கி கடந்த அக்டோபர் மாதம் கிளம்பியது நாசாவின் லூசி விண்கலன்.

செல்வாக்குள்ள அரசியல் தலைவர்கள் வந்தால் அவர்களுக்கு முன்னும் பின்னும் ஆயிரக் கணக்கில் தொண்டர்கள் சூழ்ந்து வருவார்கள் தானே. அதைப் போல சூரியனை சுற்றிவரும் வியாழனுக்கு முன்னும் பின்னும் ஒரு பெரும் கூட்டமாக விண் கற்கள் வலம் வருகின்றன.

வியாழனைச் சூழ்ந்து பயணிக்கும் இந்த விண்கல் கூட்டத்திலே சூரியக் குடும்பத்தின் பிறப்பு, பரிணாமம் ஆகியவற்றுக்கான ரகசியம் இருக்கிறது என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். எனவே லூசி வியாழனை நோக்கி ஏவப்பட்டது.

### விண்வெளி சுற்றுலா - ப்ளூ ஆரிஜின், விர்ஜின் கேலக்டிக்

விண்வெளியின் எல்லைக்கு சென்று திரும்ப வேண்டும் என்ற தனது வாழ்நாள் கனவை 71 வயதில் நனவாக்கிக் கொண்டார் பிரிட்டன் தொழிலதிபர் ரிச்சர்ட் பிரான்சன். விர்ஜின் கேலக்டிக் என்ற அவரது நிறுவனம் உருவாக்கிய யுனிட்டி என்கிற ராக்கெட் விமானம், பூமியிலிருந்து சுமார் 86 கிலோமீற்றர் உயரம் வரை பறந்து, தனது ஒன்றரை மணி நேர விண் வெளிப் பயணத்தை முடித்துக்கொண்டு வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது.

மறுபக்கம், அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ், நியூ ஷெப்பர்ட் என்கிற தன்னுடைய விண்வெளி சுற்றுலா நிறுவனமான ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் ராக்கெட்டில், பூமியிலிருந்து விண்வெளி பயணம் மேற்கொண்டார். அவரது விண்கலம் பூமியிலிருந்து 106 கிலோமீற்றர் வரை தொட்டது.

இன்னொருபுறம் ஈலோன் மஸ்க், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் வழியாக உலகின் மிகப்பெரிய ராக்கெட்டான ஸ்டார்ஷிப்பை கட்டமைத்துள்ளார்.

### மறதிக்கு வயாகராவா

ஆண்மை குறைவு பிரச்னைக்கு மருந்தாக எடுத்துக் கொள்ளப்படும் வயாகராவை, அல்சைமர்ஸ் போன்ற மறதி நோய்க்கும் மருந்தாகப் பயன்படுத்தலாம் என அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆண்டில் கூறினர். வயாகரா மருந்து மூளையில் என்ன மாதிரியான தாக்கங்களை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர்.

### ஹெச்.ஐ.வியை எதிர்க்கும் மனித உடல்

அர்ஜென்டீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர், எந்தவித மருந்து மற்றும் சிகிச்சையின்றி உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் எச்.ஐ.வி யிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொண்டதாக அறிவியல் உலகில் செய்தி வெளியானது. உலக அளவில் இப்படி ஆவணப்படுத்தப்பட்டுள்ள இரண்டாவது வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

நோயாளியின் நோயெதிர்ப்பு மண்டலம் ஹெச்.ஐ.வி வைரஸை அழித்ததாக மருத்துவர்கள் நம்புகிறார்கள். அவருடைய ஒரு பில்லியனுக்கும் அதிகமான செல்கள் சோதிக்கப்பட்ட போது, எச்.ஐ.வி நோய்த்தொற்றின் தடயங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என 'இன்டர்னல் மெடிசின்' என்கிற சஞ்சிகையின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

### மனிதனுக்கு பன்றியின் சிறுநீரகம்

அமெரிக்காவில் மூளைச்சாவு ஏற்பட்டு மருத்துவக் கருவிகளின் உதவியோடு சுவாசித்துவந்த நபருக்கு, பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி அதை உடல் ஏற்றுக்கொள்கிறதா அல்லது நிராகரிக்கிறதா என மருத்துவர்கள் சோதித்தனர்.

முன்னதாக, பன்றியிடம் இருந்து வந்த சிறுநீரகத்தை, மனித உடல் நிராகரித்து விடக் கூடாது என்பதற்காக மரபணு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

### ஸ்டிரைல் நியூட்ரினோ கிடைக்கவில்லை

பொருள்களின் இன்றியமையாத அடிப்படை கட்டமைப்பாக 'ஸ்டிரைல் நியூட்ரினோ' என்ற துகள் இருக்கும் என்கிற கோட்பாட்டு அளவில் முடிவு செய்து விஞ்ஞானிகள் அதைத் தேடி வந்தனர்.

அந்த துகளைக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட ஒரு பெரிய ஆராய்ச்சி முடிவில் அப்படி ஒரு துகள் கிடைக்கவே இல்லை. இதையடுத்து, இந்த பேரண்டம் எப்படி உருவானது என்பது குறித்து விளக்குவதற்கு உதவக் கூடிய மேலும் சுவாரசியமான கோட்பாடுகளை நோக்கி விஞ்ஞானிகளை நகர்த்தியது.

### கருந்துளையிலிருந்து ஒளியா?

விண்வெளியில் உள்ள கருந்துளை ஒன்றைச் சுற்றி, அதீத ஒளியுடைய எக்ஸ்-ரே வெளிச்சம் வருவதை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தொலைநோக்கிகளின் உதவியுடன் கண்டறிந்துள்ளனர். கருந்துளை ஒன்றில் இருந்து ஒளி வருவது கண்டறியப்பட்டது அதுவே முதல் முறை.

ஐரோப்பிய விண்வெளி முகமையின் எக்ஸ்.எம்.எம்-நியூட்டன் ( XMM-Newton) மற்றும் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் நு-ஸ்டார் (NUSTAR - Nuclear Spectroscopic Telescope Array) ஆகியவற்றின் மூலம் அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேன் வில்கின்ஸ் தலைமையிலான பன்னாட்டு அறிவியலாளர்கள் குழு இதைக் கண்டுபிடித்தது.

### ஆண் மரபணுவின்றி முட்டையிட்டு குஞ்சு பொரித்த பறவை

கலிபோர்னியா கன்டோர் என்ற இனத்தை சேர்ந்த இரண்டு பெண் பறவைகள் ஆண் துணை இல்லாமல் மட்டுமல்ல, ஆண் மரபணு இல்லாமலேயே முட்டையிட்டு குஞ்சு பொரித்திருப்பதை அமெரிக்க காட்டுயிர் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். கலிபோர்னியா கான்டோர் என்பது அழிவின் விளிம்பில் இருக்கும் ஓர் உயிரினம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சைபீரியாவில் 24,000 ஆண்டுகளாக பனியில் உறைந்திருந்த ஒரு நுண்ணிய பல செல் உயிரினம் மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளது என புதிய ஆராய்ச்சி ஒன்று கூறியது. ரஷ்யாவின் ஆர்டிக் பகுதியில் உள்ள அலீஸா ஆற்றில் இருந்து டெலாய்டு ரோட்டிஃபர் (Bdelloid Rotifer) என்கிற உயிரினத்தை விஞ்ஞானிகள் கண்டெடுத்தனர்.

### 24,000 ஆண்டுகளுக்குப் பின் உயிர்த்தெழுந்த உயிரினம்



கிரிட்டோபயோசிஸ் என்கிற உறைந்த நிலையில் பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பின், இப்போது உருகிய பிறகு, எந்த வித பாலியல் ரீதியிலான உறவுகளுமின்றி, அந்த உயிரினத்தால் இனப்பெருக்கம் செய்து கொள்ள முடிந்ததும் காணப்பட்டது

# கூட்டு ஆவணம் இழுத்தடிப்பு!

## ஹக்கீமை இன்று சந்திக்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரா. சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பிலும், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்கள் மு.கா. சார்பிலும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் மனோ கணேசனும் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணமொன்றை அனுப்பிவைப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் முயற்சித்தன. இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், சில அரசியல் காரணங்களால் கூட்டு ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றன. அக்கட்சிகளின் தலைவர்களுக்கு கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இன்று ஹக்கீமை, சம்பந்தன் தரப்பு சந்திக்கவுள்ளது.

முஸ்லிம் தரப்புகள் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்யும் பட்சத்தில், தமிழ்க் கட்சிகள் மட்டும் இணைந்து கையொப்பமிடுவது குறித்தும் பரீசிலிக்கப்பட்டு வருகின்றது. (இ)





# இலங்கைக்கான உதவி தொடரும்

## சவூதி நிதியம் உறுதி

கொழும்பு, டிசெ. 31

அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுல்தான் அப்துல்ரஹ்மான் அல்-மர்ஷாட் , பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு சவூதி அரேபிய அரசு மற்றும் அபிவிருத்திக்கான சவூதி நிதியம் வழங்கிவரும் நெருக்கமான ஒத்துழைப்பை நினைவுகூர்ந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இருநாட்டு அரசுகளுக்கும் இடையே தொடர்ச்சியாகக் காணப்படும் ஒத்துழைப்புக்கும், நட்புக்கும் தனது நன்றியையும் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் ஆதரவுடன் இந்த நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகள் 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அன்று முதல் கடந்த நான்கு தசாப்த காலங்களாக இந்த நாட்டின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிதியம் பங்களிப்புச் செய்துள்ளது.

குளியாப்பிட்டிய வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டமும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் கடன் உதவியின் கீழ் கடந்த 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதமர் இணைய தொழில்நுட்பம் ஊடாகக் கலந்துகொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட பிபில முதல் செங்கலடி வரையிலான 86.7 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டமும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்ட மாகும்.

குளியாப்பிட்டிய மற்றும் செங்கலடியில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகளிலும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்கால முன்னுரிமை குறித்து கவனம் செலுத்துகையில் குறிப்பாக கிராமிய பிரதேசங்களின் சிறு நீர்ப்பாசனம், கிராமிய நீர் வழங்கல் மற்றும் எதிர்கால வீதி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் குறித்து கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதிநிதிகளிடம் இதன்போது வேண்டுகோள் விடுத்தார். (இ)

# உள்நோக்கம் ஏதேனும் இருப்பின் கூட்டு ஆவணத்தில் ஒப்பமிடோம்

## மனோவின் பங்காளி திகாம்பரம் அணி அறிவிப்பு

ஹற்றன், டிசெ. 31

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் நோக்கோடு தமிழ்க் கட்சிகளின் கூட்டணி செயற்படுமாக இருந்தால் கூட்டு ஆவணத்தில் கையொப்பம் இடுவோம். உள்நோக்கம் ஏதேனும் இருப்பின் கையொப்பமிடமாட்டோம்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் தொழிலாளர் தேசிய சங்கம் அறிவித்துள்ளது.

ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, இந்தியப் பிரதமருக்கு



அனுப்பும் நோக்கில் தமிழ் பேசும் கட்சிகளால் கைச்சாத்திடப்படவுள்ள கூட்டு ஆவணம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அத்துடன், கூட்டு ஒப்பந்தம் அவசியமற்றது என்ற நிலைப்பாட்டில் தான் தொடர்ந்தும் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# என்னை விசாரணைக்கு ஏன் அழைத்தோம் எனச் சிந்திப்பீர்

## விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மனோ முன்னெச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 31

என்னை ஏன் விசாரணைக்கு அழைத்தோம் என விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சிந்திக்க வேண்டிவரும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு: -

“படம் சும்மா ஓடம்..! இதற்கும், செய்திக்கும் தொடர்பில்லை. கையில் கத்தியுடன் போகும் எண்ணம் எதுவும் இல்லை...!

இன்று (நேற்றுமுன்தினம்) காலை விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு நான் போகவில்லை. “குறைந்த அவகாசம் காரணமாக, இன்று (நேற்றுமுன்தினம்) தவிர்க்க முடியாத காரணத்தால், நான்



சமுகமளிக்க முடியாது. ஜனவரியில் வேறொரு நாள் தாருங்கள்” என ஆணைக்குழுவுக்கு அறிவித்து விட்டேன்.

அடுத்து, இந்த ஆணைக் குழு என்னை அழைத்ததன் காரணம் சரியாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். இது ஊழல் விசாரணை ஆணைகுழு அல்ல.

கடந்த அரசின் போது, அதற்கு முந்தைய மஹிந்த ராஜபக்ஷ அரச அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை பற்றி விசாரிக்க, அப்போது ஓர் அமைச்சரவை குழு அமைக்கப்பட்டதாகக் கூறி, அது பற்றி விசாரிக்கவே இவர்கள் என்னை அழைக்கின்றார்கள்.

இதற்கு முதல், சட்டமா அதிபரிடம் கூறி வழக்குகளை வாபஸ் வாங்கி, முந்தைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்களை, இவர்கள் விடுவித்து விட்டார்கள்.

இது போதாது என்று இப்போது, “இலஞ்ச ஊழலை விசாரித்தவர்களை இவர்கள் விசாரிக்கிறார்களாம்”. எப்படி கதை?

அடுத்த மாதம், நான் அங்கே போனால், நான் தரப்போகும் சாட்சியம் காரணமாக, என்னை ஏன் அழைத்தோம் என யோசிக்கப் போகின்றார்கள்”

- என்றுள்ளது. (இ)



# பல்பொருள் அங்காடிகளில் விறகுகள் விற்பனைக்கு

கொழும்பு, டிசெ. 31

சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால், நுகர்வோர் விறகு அடுப்புகளைப் பயன்படுத்துவதற்கு ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கையின் பல்பொருள் அங்காடிகளில் விறகு மற்றும் மண் சட்டிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டு ஆகியவற்றை அடுத்தே பல்பொருள் அங்காடிகளில் விறகு விற்பனை செய்யப்படுவதாக அவதானிக்க முடிகின்றது.

ஒரு கட்டு விறகு 200 ரூபா முதல் 250 ரூபாய் வரையான விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக அறிய முடிகின்றது.

அத்துடன் சில வியாபார நிலையங்களிலும் விறகுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கட்டு விறகு 80 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. (இ)



# பாரிஸ் வீதிகளில் மாஸ்க் கட்டாயமாக்கப்படுகிறது

பாரிஸ், டிசெ. 31

பிரான்ஸின் பாரிஸ் நகரில் மீண்டும் மாஸ்க் அணிந்து நடமாடுவது கட்டாயமாக்கப்படுவதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்திருக்கிறது. கார்கள் போன்ற வாகனங்களின் உள்ளே இருப்போரும் சைக்கிள் பயணிகளும் தவிர்ந்த ஏனையோர் மாஸ்க்அணிவது அவசியமாக்கப்பட்டுள்ளது. மீறுவோர் அபராதம் செலுத்த நேரிடும்.

இல்-து பிரான்ஸ் பிராந்தியத்தின் மாவட்டங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆறு மணி முதல் வீதிகளில் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை ஆண்டின் இறுதி நாளை ஒட்டியும் பல கட்டுப்பாடுகளைப் பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கிறது. வீதிகளில் கூடுவதும் மது அருந்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இரவிரவாக மது அருந்துவதையும் களியாட்டங்களையும் தடுப்பதற்காக பாரிஸில் சகல அருந்தகங்களும் குடிபான நிலையங்களும் சனி, ஞாயிறு இரு தினங்களும் அதிகாலை 02.00 மணிக்கு மூடப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

புத்தாண்டை ஒட்டி முதல் நாள் இரவில் மக்கள் கூட்டம் களைகட்டுகின்ற சம்ப் எலிசிஸ் மற்றும் சென் நதியின் கரையோரங்களில் கூடுவதும் மது அருந்திக் கும்மாளம் அடிப்பதும் இதன் மூலம் முற்றாகத் தடுக்கப்படவுள்ளது.

பொது மக்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கின்ற எந்த இடங்களிலும் நடனம் மற்றும் களியாட்டங்கள் செய்வதற்கும் பொலிஸ் தலைமையகம் தடைவிதித்திருக்கிறது.

சுமார் ஒன்பது ஆயிரம் பொலிஸாரும் இராணுவத்தினரும் புத்தாண்டு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மக்கள் கூடுவது கட்டுப்படுத்தப்பட்டாலும் பொதுப் போக்குவரத்துகள் வெள்ளி இரவு முழுவதும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் நகர சபையினால் வருடாந்தம் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வந்த இன்னிசை அரங்கமும் வாண வேடிக்கை நிகழ்வும் இன்று வெள்ளி இரவு நடைபெறமாட்டா என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# செல்வந்த நாடுகளின் அதிவேக பூஸ்டர் தொற்றுநோய் நீடிக்கவே வழிவகுக்கும்!

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் எச்சரிக்கை

நியூயோர்க், டிசெ. 31

செல்வந்த நாடுகளின் அதிவேக பூஸ்டர் தடுப்பூசி நடவடிக்கை உலகில் தொற்றுநோய் மேலும் நீடிக்க வழிவகுக்கலாம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.

ஏனெனில், செல்வந்த நாடுகளின் பூஸ்டர் தடுப்பூசிப் பணிகளால் ஏழை நாடுகளுக்குச் சேரவேண்டிய தடுப்பூசிகளின் எண்ணிக்கை குறையும். இதன்மூலம் ஏழை நாடுகளில் தொற்று பாதிப்பு தீவிரமடையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உலகெங்கும் அனைத்து நாடுகளில் உள்ள மக்களில் குறைந்தது 70



வீதமானோர் தடுப்பூசி பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் வகையில் புத்தாண்டு தீர்மானம் அமைய வேண்டும் எனவும் டெட்ரோஸ் அதானோம் வலியுறுத்தினார்.

ஏறக்குறைய 100 நாடுகள் தங்கள் மக்கள் தொகையில் 40 வீத பேருக்கு தடுப்பூசி போடுவதற்கான இலக்கைக்கூட இன்னும் அடையவில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகெங்கும் கோவிட் மற்றோர் அலை மீண்டும் தீவிரமாகி பூஸ்டர் தடுப்பூசி நடவடிக்கைகள் வேகமடைந்து வரும் நிலையிலேயே உலக சுகாதார அமைப்பு இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

செவ்வாயன்று வெளியிடப்பட்ட உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி, டிசெம்பர் 26இற்கு முந்தைய வாரத்தில் ஐரோப்பாவில் அனைத்து வகை திரிபுகளாலும் பாதிக்கப்பட்ட புதிய கோவிட் தொற்று நோயாளர் தொகை 57 வீதத்தால் அதிகரித்துள்ளது. அமெரிக்காவில் இது 30 வீதம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சுனாமி அலை போன்று பிரான்ஸை வேகமாகத் தாக்குகின்றது வைரஸ்!

## சுகாதார அமைச்சர் அபாயச் சங்கு

பாரிஸ், டிசெ. 31

எதிர்பாராத அளவில் தொற்று எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிக்கிறது. கடந்த 24 மணி நேரத்தில் இரண்டு லட்சத்து எட்டாயிரம்(208,000)புதிய தொற்றுக்கள் உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் அறிவித்திருக்கிறார்.

"நாட்டில் ஒவ்வொரு நொடிக்கும் இரண்டு தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனர்" என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

சுகாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கான அலகுகளை வலுப்படுத்துவதற்கான சட்ட விவகாரக் குழு முன்னிலையில் புதன்கிழமை பகல் விளக்கம் அளித்த அமைச்சர்,டெல்ரா, ஒமைக்ரோன் ஆகிய இரண்டு திரிபுகளும் நாட்டைச் 'சுனாமி அலையாகத்' தாக்கி வருகின்றன என்று குறிப்பிட்டார். தொற்றின் வேகத்தை விளக்குவதற்கு அமைச்சர் இந்த வார்த்தையைப் பயன்படுத்துவது இதுவே முதல்முறை ஆகும்.

கடந்த சில நாட்களில் பத்து இலட்சம் பேர் புதிதாகத் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். நாட்டின் சனத் தொகையில் பத்து வீதமானவர்கள் தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்களாக இருக்கின்றனர் என்பதை நாங்கள் மதிப்பிட முடியும்.

நாளொன்றுக்கு சராசரியாக ஒரு இலட்சம் புதிய தொற்றாளர்கள் என்ற கணக்கில் தொற்றுக்கள் அதிகரித்துச் செல்கின்றன. இது எதிர்பாராத ஒரு நிலைமை ஆகும்.




ஐந்து மில்லியன் மக்கள் ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாமல் உள்ளனர். பாரிஸ் பிராந்திய மருத்துவமனைகளின் அதிதீவிரசிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டிருப்போரில் 70 வீதமானவர்கள் தடுப்பூசி ஏற்றாதவர்களாவர். ஊசி ஏற்றாதவர்களுக்கு அதனைப் போட்டுக் கொள்வதற்கு இன்னமும் சிறிது அவகாசம் இருக்கிறது.

- இவ்வாறு அமைச்சர் ஒலிவியே வேரன் தெரிவித்துள்ளார். (அ)

# உலகெங்கும் தற்போது தினசரி 9 இலட்சம் பேருக்கு கொரோனா

நியூயோர்க், டிசெ. 31

உலக நாடுகளை ஒமைக்ரோன், டெல்டா திரிவுகள் சுனாமியாகத் தாக்கி வரும் நிலையில் உலகம் முழுவதும் தினசரி சராசரியாக தற்போது 9 இலட்சம் கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

கடந்த 22 முதல் 28 ஆம் திகதி வரை உலகெங்கும் பதிவான தொற்று நோயாளர் தொகை தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

உலகெங்கும் மிக வேகமாக தொற்று நோயாளர் தொகை தொடர்ந்து உயர்ந்துவரும் நிலையில் இந்த எண்ணிக்கை அடுத்து வரும் நாட்கள் வாரங்களில் இன்னும் அதிகரிக்கக் கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் கடந்த புதன் கிழமை 208,000 தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டனர். அத்துடன், 184 கொரோனா மரணங்கள் பதிவாயின. தொற்று நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 53 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

இங்கிலாந்தில் நேற்றுமுன் தினம் 183,037 புதிய தொற்று நோயாளர்கள் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது டன், 57 இறப்புகள் பதிவாகின.

இத்தாலியில் கடந்த செவ்வாய்க்கிழமை 78,313 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை இந்த எண்ணிக்கை 98,020 ஆக உயர்ந்தது.

டென்மார்க்கில் நேற்றுமுன் தினம் 23,228 புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். அவர்களில், 1,205 பேர் முன்னர் கோவிட் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்களாவர்.

போர்த்துக்கல்லில் நேற்று முன் தினம் 26,867 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது. இது கடந்த செவ்வாய்க் கிழமை 17,172 ஆக இருந்தது.

அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் 18,241 தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். இது கடந்த செவ்வாய்க்கிழமை 11,300 ஆகப் பதிவாகியிருந்தது.

கிரீஸ் நாட்டிலும் புதிய சாதனை மட்ட அதிகரிப்பாக நேற்றுமுன்தினம் 28,828 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)




# இந்தோனேசியாவுக்கு அருகில் நிலநடுக்கம்!

ஜகார்த்தா, டிசெ. 31

இந்தோனேசியாவின் மலுக்கு மாநிலக் கரையோரத்தை 7.3 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் உலுக்கியுள்ளது.

நேற்று காலையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவில்லை.

சுனாமி எச்சரிக்கைகளும் விடுக்கப்படவில்லை.

166 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்ட நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நில அதிர்வுகளை அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரக் மக்களும் உணர்ந்தனர்.

நீண்டநேரத்துக்கு நீடித்த நிலநடுக்கம் வலுவாக உணரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# போயிங் மீதான தடையை நீக்கியது இந்தோனேசியா

ஜகார்த்தா, டிசெ. 31

2018 ஆம் ஆண்டில் 189 பேர் உயிரிழப்புக்கு காரணமான போயிங் 737 மக்ஸ் விமான விபத்து இடம்பெற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த விமானம் மீதான தடையை இந்தோனேசியா நீக்கியுள்ளது.

விமானத்தின் அமைப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் சோதனைக்கு உற்படுத்தப்பட்ட நிலையில் விதிக்கப்பட்ட தடை உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படும் என இந்தோனேசியாவின் போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எத்தியோப்பிய விமான சேவைக்கு சொந்தமான 737 மக்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 157 பேர் உயிரிழந்த நிலையில் உலக நாடுகள் குறித்த விமானத்துக்கு தடை விதித்திருந்தன.

இதனை அடுத்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் குறித்த போயிங் 737 மக்ஸ் விமானத்தை மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இருந்து அத்த வகை விமானங்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக எத்தியோப்பிய விமான சேவையும் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இந்த ஆண்டு விமானத்திற்கான தடைகளை நீக்கிய நிலையில், 180க்கும் மேற்பட்ட நாடுகள் போயிங் 737 மக்ஸ் விமானத்தை பயன்படுத்த அனுமதித்துள்ளன. (அ)

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்:

# இந்தியா பெருவெற்றி!







செஞ்சூரியன், டிசெ. 31

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை 113 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இந்திய அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தற்போது விளையாடி வருகின்றது. முதல் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை செஞ்சூரியனில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 105 ஓவர் களில் சகல விக்கெட்களையும் இழந்த இந்திய அணி 327 ஓட்டங்களைக் குவித்தது. கே. எல். ராகுல் 123, மயங்க் அகர்வால் 60, அஜிங் கிய ரஹானே 48 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் நிகிடி 6 விக்கெட் களையும், ரபாடா 3 விக்கெட் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 197 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பவுமா 52, குயின்ரன் டி கொக் 34, ஆகியோர் அதிகபட்ச ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தியாவின் பந்துவீச்சில் முஹமட் சமி 5 விக்கெட்களையும், பும்ரா, தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50.3 ஓவர்களில் சகல விக்கெட்க ளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில், ரிஷப் பந்த 34, கே. எல். ராகுல் 23, ரஹானே 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா, ஜனேசன் ஆகியோர் தலா 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

305 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது தென்னா பிரிக்க அணி. தொடக்க வீரர்களில் ஒருவரான எல்கர் சிறப்பாக ஆடினாலும், மறுபுறத்தில் விக்கெட்கள் சிறிய ஓட்ட இடைவெளிகளில் வீழ்த்தப்பட்டன. எல்கர் 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பவுமா மட்டும் நிதானமாக ஆடினார். 68 ஓவர்க ளில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. பவுமா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் பும்ரா, முஹமட் சமி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், முஹமது சிராஜ், அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக கே. எல். ராகுல் தெரிவானார். (ஐ)




## ஓய்வு பெறுகிறார் ரோஸ் ரெய்லர்!

வெலிங்டன், டிசெ. 31

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரே தனது இறுதி டெஸ்ட் தொடர் என்று நியூசிலாந்து அணியின் ரோஸ் ரெய்லர் அறிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஒருநாள் போட்டி தொடர், தாயகத்தில் நடக்கவுள்ள நெதர்லாந்து அணிக்கு எதிரான 3 ஒருநாள் போட்டித் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ரெய்லர் விடைபெறுவார்.

37 வயதான நியூசிலாந்து வீரரான ரெய்லர் இதுவரை 110 டெஸ்ட் போட்டிகளில் 7584 ஓட்டங்களையும், 233 ஒருநாள் போட்டிகளில் 8581 ஓட்டங்களையும் குவித்து அதிக ஓட்டங்களை பெற்ற நியூசிலாந்து வீரர்களில் ஒருவராக உள்ளார்.

2007 நவம்பரில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தனது முதல் டெஸ்டில் ரெய்லர் விளையாடினார். 2006இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சர்வதேச அரங்கில் அறிமுகமானார்.

ஜனவரி பிற்பகுதியில், அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து விளையாடவுள்ளது. இதைத் தொடர்ந்து தாயகத்தில் நெதர்லாந்து அணிக்கு எதிராகவும் ஒரு தொடரில் பங்கேற்கிறது. ஆனால், இந்தத் தொடர்களுக்கு முன்னதாகவே ரெய்லர் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரெய்லர் தனது ருவிட்டர் பதிவில், "இது ஓர் அற்புதமான பயணம் நான் இருக்கும் வரை எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியது நம்பமுடியாது அதிர்ஷ்டமாக உணர்கிறேன். சிறந்த வீரர்களுடன் விளையாடுவதும், அவர்களுக்கு எதிராக விளையாடுவதும் வழியில் பல நினைவுகளையும் நட்பையும் உருவாக்கியதும் ஒரு பாக்கியம்.", என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற வேண்டும்!



மெல்பர்ன், டிசெ. 31

இந்திய அணியை இந்திய மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரில் தோற்கடிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் டேவிட் வோர்ணர் தனது ஆசையை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக நடந்து வரும் ஆஷஷ் டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில், தான் டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு பெற முன்னர் இந்திய அணியை சொந்த மண்ணில் வீழ்த்த வேண்டும். இங்கிலாந்தில் ஆஷஷ் தொடரை வெல்ல வேண்டும் என்பதே விருப்பம் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

"இந்திய மண்ணில் வைத்து இந்திய அணியை டெஸ்ட் தொடரில் நாங்கள் தோற்கடித்தது இல்லை. நான் ஓய்வு பெறுவதற்குள் இந்திய அணியை அவர்கள் மண்ணில் வைத்து தோற்கடித்து தொடரை வெல்ல வேண்டும் என்பது என் ஆசை. இங்கிலாந்தில் 2023ஆம் ஆண்டு நடக்கும் ஆஷஸ் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும். வெளியே கடந்த 2019ஆம் ஆண்டு நாங்கள் தொடரை சமன் செய்தோம். அதேபோன்று மற்றொரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தால், நான் ஓய்வு பெறுவது குறித்து யோசிப்பேன்.

எனக்கு வயதாகும்போது, நிச்சயம் அடுத்த ஆஷஷ் டெஸ்ட தொடரில் இங்கிலாந்து அணியில் ஜேம்ஸ் அண்டர்சனுக்கு அதிகமான வயதாகியிருக்கும். என்னைப் பொறுத்தவரை என் திறமைக்கு ஏற்றவாறு விளையாடி ஓட்டங்களைக் குவிக்க முயல்வேன். தொடர்ந்து கிரிக்கெட்டில் இருக்கவே விரும்புகிறேன். நான் ஓட்டம் பெறாமல் கடந்த காலங்களில் இருந்திருக்கிறேன். வரும் புத்தாண்டு முதல் அனைத்து வகையிலும் அதிகமான ஓட்டங்கள் அடிக்க முயல்வேன்", என்றார். (ஐ)



## ஏ.ரி. பி. தொடரிலிருந்து விலகினார் ஜொகோவிச்

சிட்னி, டிசெ. 31

உலகின் முதல்நிலை வீரரான ஏ. ரி. பி கிண்ண ரென்னிஸ் தொடரிலிருந்து நோவக் ஜொகோவிச் விலகியுள்ளார். இதனால், அவர் வரும் ஜனவரி 17ஆம் திகதி மெல்பர்னில் தொடங்கும் அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்பாரா என்பதில் நிச்சயமற்ற நிலையுள்ளது.

2022 ஜனவரியில் ஆரம்பமாகும் தொடரில் அனைத்து வீரர்களும் தடுப்பூசி போட்டிருக்கவேண்டும். அல்லது சுயாதீன நிபுணர் குழுவால் மருத்துவ விலக்கு அளிக்கப்பட வேண்டும். நடப்பு சம்பியனாவுள்ள ஜொகோவிச் தனது தடுப்பூசி நிலை குறித்து பகிரங்கமாகப் பேசவில்லை.

இந்நிலையில், சிட்னியில் 16 நாடுகளின் ஏ. ரி. பி. கிண்ணம் நடைபெறவுள்ளது. இதில் செர்பியாவுக்காக 9 முறை பங்கேற்ற ஜொகோவிச்சுக்கு பதிலாக 33ஆவது நிலையிலுள்ள டுசன் லஜோவிச் விளையாடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

21. பின்வரும் உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. ஒரு தென்னந் தோட்டத்தில் இருந்து மூன்று தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் அருகே தரப்பட்டுள்ளன.


| தடவை | தேங்காய்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதலாம் | 2098 |
| இரண்டாம் | 3317 |
| மூன்றாம் | 2209 |

(i) முதலாம், இரண்டாம் தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ........................

(ii) மூன்றாம் தடவையைவிட இரண்டாம் தடவை எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன?

: ........................

23. 

அருகே ஒரு திண்மப் பொருள் தரப்பட்டுள்ளது.

(i) இந்தத் திண்மப் பொருளின் பெயர் யாது?

: ............................................................

(ii) இத்திண்மத்திற்கு எத்தனை முகங்கள் உள்ளன?

: ............................................................

24. பிற்பகல் 10.20 என்பது இருபத்து நான்கு மணிக்கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

: ............................................................

25. ஒரு தாங்கியில் இருந்த பாலில் இருந்து $11l\ 750ml$ பால் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த பாலின் கனவளவு $6l\ 900ml$ ஆகும். தாங்கியில் முதலில் இருந்த பாலின் அளவை $l, ml$ இல் தருக.

: ..........................$l$ ..........................$ml$

26. 618 இனை 3 இனால் வகுக்கும் போது விடை யாது? : ............................................

27. $5m\ 50cm$ நீளமுள்ள ஒரு பூம்பாத்தியை மறுபடியும் அமைத்த போது அதன் நீளம் $7m\ 20cm$ ஆக இருந்தது. அதன் அதிகரித்த நீளம் யாது?

: ..........................$m$ ..........................$cm$

28. 6kg 250g தேயிலையை ஒரு பைக்கற்றில் 250g வீதம் எத்தனை பைக்கற்றுக்களில் இடலாம்?

: ............................................................

29. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | ஒன்றின் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| அரிசி | 84 | 50 | 2kg | (i) ........... | ........... |
| சீனி | 118 | 00 | (ii) ........... | 59 | 00 |
| தேயிலை | 300 | 00 | (iii) ........... | 75 | 00 |
| மொத்தப் பணம் | | | | 303 | 00 |

### விடைகள்

21. (ஏதேனும் இரண்டு பகுதிகளுக்கு நிறந்தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.)

22. (i) 5415
(ii) 1108

23. (i) கனவுரு
(ii) 6 / ஆறு

24. 22:20

25. 18, 650

26. 206

27. 1, 70

28. 25

29. (i) 169, 00
(ii) 500g
(iii) 250g

# அமைச்சர்கள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்

## கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, டிசெ. 31

அமைச்சர்கள் உட்பட அனைத்து அரச அதிகாரிகளும் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு மனசாட்சியின்றி பல வாகனங்களை இந்த நேரத்தில் பயன்படுத்தினால் அவர் உடல் நலமின்மையானவராக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்



இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர்கள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவில்லை என்றால், அது பொது மக்களுக்கு கோபத்தையே விளைவிக்கும் என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 07 சென்.செபஸ்தியான் வீதி ஆதன இல 32/6A என்ற இலக்கத்தை உடைய ஆதனமானது தேவசகாயம் பெண் மதினா மற்றும் ஞானப்பிரகாசம் இறப்பியல் பெண் மரியா என்ற பெயரில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

கபரியேல் ஞானப்பிரகாசம் தேவதாசன் என்பவர் 07.01.2005 திகதியில் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் தவநேசன் முகதாவில் 8883 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனத்தின் உரித்தாளராக தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் மேற்குறித்த கபரியேல் ஞானப்பிரகாசம் தேவதாசன் என்பவர் 26.03.2008 திகதியில் பிரசித்த நொத்தாரிசு சஞ்சை தவநேசன் முகதாவில் 283ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை செபஸ்தியாம்பிள்ளை மறுபெயர் பெனிப்பஸ் சிலுவைதாஸ்க்கும் பெண் கிறிஸரீனாவுக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 03.09.2011ம் திகதியில் 283ம் இலக்க உறுதி மூலம் செபஸ் தியாம்பிள்ளை மறு பெயர் பொனிப்பாஸ் சிலுவைதாசும் பெண் கிறிஸ்ரினாவும் தங்கள் சீவிய உரித்துக்கு அமைவாக தனது மகள் அன்று பெண் கனிஸ்ரா கமலினி என்பவருக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 09.07.2018ம் திகதியில் 2034 ம் இலக்க உறுதி மூலம் அந்தோனிப் பிள்ளை அன்றூவும் பெண் கனிஸ்ரா கமலினியும் சிலுவைதாஸ் உம் குறித்த ஆதனத்தை றெஜின் லெயோன்ஸ் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

ஆதன அட்டவணை - வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று பாசையூர் இறை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு 1ஃ65 யாழ் மாதநகரசபை எல்லைக்குட்பட்ட “விளாங்குளம் வயல் ” குளி பத்து தசம் ஒன்பது ஏழு (10.97) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் 2004/02/10 ம் திகதி அளந்து வரைந்த 2483ம் இலக்கப் படத்தில் துண்டு - 1 என காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லைகள்.

கிழக்கு - 2ம் குறுக்குத்தெரு .

வடக்கு - செபஸ்தியாம்பிள்ளை யோன்கெனடியின் ஆதனம்.

மேற்கு :- தேவசகாயம் பெண் நதீனா வின் ஆதனம்,

தெற்கு - அடிப்பாதை இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது சிலுவைதாஸ் றெஜின் லெயோன்ஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரி பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிலுவைதாஸ் றெஜின் லெயோன்ஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ் வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**

**எனது இல :-** G/L/225/2021
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**
**29.12.2021**

# முட்டாள்தனமான தீர்மானங்களால் நாட்டையே தீக்கிரையாக்கிய அரசு

## சாடுகின்றார் நளின் பண்டார எம்.பி.

கொழும்பு, டிசெ. 31

“காபனிக் உரப் பிரச்னையால் முழு நாடும் பற்றி எரிகின்றது. முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டையே அரசு தீக்கிரையாக்கியுள்ளது.”

என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”உரப் பிரச்னை காரணமாக விவசாய நிலங்கள் தீயில் எரிகின்றன. விவசாயிகளின் வயிறும் எரிகின்றது. அதுமட்டுமன்றி சமையலறை தீப்பற்றி எரிகின்றது. முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டையே தீக்கிரையாக்கியுள்ளனர்.

மரத்தின் வேர்கள் வலுவிழக்கும்போது, கிளைகளைச் சபிப்பது பயனற்றது. அங்கு முழு அமைப்பும் உடைந்து விடுகின்றது.

ஜனாதிபதி, அதிகாரிகளைத்



திட்டுவதில் அர்த்தமில்லை. ஜனாதிபதியின் முடிவுகளினாலேயே நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது” - என்றார். (இ - கே)

# நாம் உருவாக்கிய அரசிலிருந்து ஏன் விலகிச் செல்ல வேண்டும்?

## இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் வாசு

**கொழும்பு, டிசெ. 31**

**நாங்கள் உருவாக்கிய அரசிலிருந்து நாங்கள் ஏன் விலகிச் செல்ல வேண்டும் என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**



இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசிலிருந்து விலகிச் செல்லும் எந்த எண்ணமும் எமக்கு இல்லை.

நுகேகொடையில் இருந்து மஹிந்த காற்று வீசிய நாள் முதல் மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் இறுதிப் பலனாக இந்த அரசு உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் முன்னோக்கிச் செல்வதே ஒரே நம்பிக்கை.

ஆனால், நாட்டுக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் அது குறித்து கேள்வி எழுப்பப்படும்” - என்றார். (இ)

# மீண்டும் தொழில்சங்க நடவடிக்கை!

## அரச மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 31

உள்ளிருப்புப் பயிற்சி பின்னரான நியமனங்கள் தொடர்பான கோரிக்கைகள் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் தொழில்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த நியமனங்களில் சுகாதார அமைச்சர் செல்வாக்கு செலுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சங்கத்தின் உறுப்பினரான வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இடமாற்றச் சபையிலோ அல்லது உரிய நியமனப் பட்டியலைத் தொகுக்கும் போதோ தாம் தலையிடவில்லை என சுகாதார அமைச்சர் கூறியதாகவும், அரசியல் தலையீடு இருப்பது நிரூபிக்கப்பட்டால் அரசியலை விட்டு விலகுவதாக அமைச்சர் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நியமனப் பட்டியல்கள் சுகாதார அமைச்சருக்கு அனுப்பப்பட்டதாகவும், இடமாற்ற சபையின் முடிவை அவர் மாற்றியதாகவும் அவர் கூறினார்.

# சர்வதேச நாணய நிதியத்தை அரசு நாடுவதில் தவறில்லை

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 31

நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இந்த வேளையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை அரசு நாடுவதில் தவறில்லை என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களில் பல அரசுகள் நெருக்கடியான காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடின.

ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டன. அத்துடன் ஏற்க முடியாதவற்றை நிராகரித்தன.

நட்டத்தில் இயங்கும் சில நிறுவனங்களைத் தனியார் மயமாக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்கலாம்.

அரச சேவைக்குப் புதிதாக ஆட்களை இணைத்துக்கொள்ளக்கூடாது போன்ற நிபந்தனைகளும் விதிக்கப்படலாம்.

அரச சேவைக்கு ஆட்களை இணைத்துக்கொள்வதில் தற்போதைக்கு எந்தப் பிரச்னையும் ஏற்படாது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்ற அதிக நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார் மயமாக்குவது பிரச்னையாக இருக்காது.

எனினும், சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது.

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையோ அல்லது வேறு ஒரு நட்பு நாட்டின் ஆதரவையோ பெற வேண்டியது மிகவும் அவசிய மானது” - என்றார். (இ)

## இராணுவத்தின்...

அத்துடன், "நாடு பட்டினிச் சாவை நோக்கிச் செல்கின்ற இன்றைய நிலைமையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் நலன் கருதி அவசர தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். இல்லையேல், 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாடும் அரசும் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்." என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டின் சமகால நிலவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு அடுப்பு வெடிப்பு, எரிபொருட்களின் விலையேற்றம், பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மரக்கறிகளின் விலை உயர்வு எனப் பலதரப்பட்ட பிரச்னைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர். ஆனால், அரசோ மக்களை ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இந்த அரசின் முட்டாள்தனமான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியடைந்துள்ளது. எந்த நாடும் இலங்கைக்குக் கைகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி என அரசிடம் நாம் பல தடவைகள் கூறிவிட்டோம். ஆனால், அரசோ அசமந்தப்போக்கில் செயல்படுகின்றது.

இராணுவத்தின் துணையுடன் ஆட்சியை நடத்திச் செல்லலாம் என்று அரசு கனவு காண்கிறது. இராணுவத்தைக் கொண்டு வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை எப்படி உயர்த்த முடியும்?

இராணுவத்தை முன்நிறுத்தி ஆட்சியை நடத்த அரசு முயன்றால் நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் சர்வதேசமும் கடுமையாக எதிர்க்கும். நாடு பட்டினிச் சாவை நோக்கிச் செல்கின்ற இன்றைய நிலைமையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் நலன் கருதி அவசர தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். இல்லையேல் 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாடும் அரசும் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். எமது கருத்துக்களை அரசியல் ரீதியில் அரசு பார்க்கக்கூடாது. நாட்டின் நலன் கருதி அரசு முடிவு எடுக்க வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நாட்களும் பேராபத்து மிக்கதாகவே அமையும்" - என்றார். (இ)

## இந்தியா...

தெரிவித்துள்ளது.

இந்த மாத முற்பகுதியில் புதுடில்லியில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய, இலங்கைக்கு நீண்டகால மற்றும் மத்திய கால ஒத்துழைப்புகள் கிடைக்கவுள்ளதாக வருட இறுதி விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய பயணத்தின்போது உணவு, சுகாதார பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் செலாவணி ஸ்திரத்தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## இருக்கும்...

போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் 30ஆம் திகதி அன்றைய தினத்தில் மாதம் தோறும் குறித்த போராட்டத்தை நாங்கள் செய்து வருகின்றோம். எங்களுடைய உறவுகள் வரும்வரை இந்த போராட்டத்தை நாங்கள் தொடர்ந்தும் செய்வோம்.

எங்களுடைய உறவுகளை பிடித்து செல்லும்போது, 18, 19 வயதாக இருந்தும். இன்று 28, 30 வயதாகிவிட்டது. இந்த நிலையில் பொருளாதார விலை உயர்வுகளால் எமது குடும்பங்கள் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். விலை உயர்ந்துகொண்டு போகின்ற நேரத்தில் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் எமது உறவுகள் பிள்ளைகளை தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

நாடு இராணுவமயப்படுத்தப்பட வேண்டும் என ஞானசார தேரர் கூறியிருக்கின்றார். ஏற்கனவே இராணுவ மயமாக்கப்பட்ட நிலையில்தான் இன்று எங்களுடைய பிள்ளைகளை தொலைத்து தெருவில் நிக்கின்றோம். மேலும் ஞானசார தேரர் இராணுவத்தை கொண்டுவந்து குவித்து, இருக்கின்ற பிள்ளைகளையும் இல்லாதாக்குவாரேயன்றி, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடித்தருவார் என்ற நம்பிக்கை இல்லாமலேயே போகின்றது. அவ்வாறு இராணுவ மயமாக்கப்பட்டால் மேலும் எமது உறவுகளை இழப்போம் என்பதை கூறிக்கொள்கின்றேன் என அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## வடக்கு, கிழக்கு...

இடமாற்ற நடைமுறையின் கீழ் இந்த இடமாற்றம் தலைமை நீதியரசரால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார். மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார். திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார். (ஐ-3)

## பணிப்புறக்கணிப்பு...

கின் பல வைத்தியசாலைகள் ஸ்தம்பித மடைந்தன.

எனினும், வைத்தியசாலைகளில் அவசர மற்றும் உயிர்காப்பு சிகிச்சைகளுக்கு மாத்திரம் சுகாதார தொழில்சங்கங்கள் செயல்பட்டன. அத்துடன் மேலதிக விடயங்களில் பகிஷ்கரிப்பை மேற்கொண்டன. இதனால் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மருந்து விநியோகப் பிரிவு என்பன செயலிழந்து காணப்பட்டன.

நேற்று காலை 10.30 மணிக்கு வடமாகாணம் முழுவதும் உள்ள சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## நயினாதீவு...

மழையுடன் கூடிய காலநிலை நிலவும் நிலையில் நேற்று மாலை வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவு வடக்கு ஜே/35 கிராம சேவகர் பிரிவில் வீசிய மினி சூறாவளியால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் சேத விவரங்கள் தொடர்பில் குறித்த பிரதேச செயலகத்தினூடாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது- என்றார். (அ)

# அத்தியாவசியப் பொருள் விலை உயர்வே அரசு மக்களுக்கு வழங்கும் புதுவருட பரிசு

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 31

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பையே அரசாங்கம் பொதுமக்களுக்கு புத்தாண்டு பரிசில்களாக வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனமல்வில பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நத்தார் கொண்டாட்டங்களுக்கு முன்னர் எரிபொருள் விலையை அதிகரித்து அதனை நத்தார் பரிசாக பொதுமக்களுக்கு அரசாங்கம் வழங்கியிருந்தது.

அதேநேரம், இன்று முதல் பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதுவே நாட்டின் தாய்மார்களுக்கும், பிள்ளைகளுக்கும் அரசாங்கம் வழங்கும் புத்தாண்டு பரிசாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம்சுமத்தியுள்ளார்.

## இலங்கை மீது

# பொருளாதாரத் தடை கோரும் சீன நிறுவனம்

கொழும்பு, டிசெ. 31

இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ள சீனாவின் உர நிறுவனம், இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளது.

சீனாவின் சீவின்பயோடெக் நிறுவனத்தின் சேதன பசளையில், ஆபத்தான பக்டீரியாக்கள் காணப்படுவது உள்ளூர் சோதனைகளின் மூலம் உறுதியானதைத் தொடர்ந்து அந்த உரத்தை இலங்கை நிராகரித்தது. இதற்குச் சீன நிறுவனம் உடன்படவில்லை.

இலங்கை அரச நிறுவனம் மீது வழக்குத் தொடுக்கப்பட்டதுடன், மக்கள் வங்கியையும் கறுப்பு பட்டியலில் இணைத்தது. அதேபோல் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகலும் ஏற்பட்டது.

நெருக்கடிகள் வலுத்ததால் சீன நிறுவனத்துக்கு, 6.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இலங்கை முன்வந்தது.

இதன்பிரகாரம் இலங்கை அரசு 6.7 மில்லியன் அமெ ரிக்க டொலர் களைச் செலுத்தியுள்ள போதிலும் - இலங்கை அரசுக்கு எதிராக சீன நிறுவனம் தொடர்ந்தும் போர்க் கொடி தூக்கி வருகின்றது.

இந்த விவகாரத்தால் தனது பெயருக்குப் பாதிப்பு ஏற் பட்டுள்ளது என அந்த நிறுவனம் கருதுகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து அந்த நிறுவனத்தின் தலைவர்கள், சீன அரசு - இலங்கை மீது தடைகளை விதிக்க வேண் டும் என அழுத்தங் களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். (இ)

## யாழ். சிறுமிகள்...

இரு சகோதரிகளும் 29 வயது பெண்ணுமே இவ்வாறு காணாமல் போயினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கம்பஹா - வத்தளையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு சென்ற சிறுமிகள் உறவுக்கார பெண்ணுடன் அருவியில் நீந்தச் சென்ற போதே அதன் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

இவர்களை தேடும்பணி இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மின் கட்டணமும்...

பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நாட்டில் பொருட்களுக்கு சிறிதளவு தட்டுப்பாடுகள் உள்ளன. ஆனாலும் வரிசை யுகம் உருவாகவில்லை.

அதேபோல மின்கட்டணத்தில் எவ்வித மாற்றமும் வராது. பழைய கட்டணமே அறிவிடப்படும்." - எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## புகையிலை...

அதிகரிப்பதற்காக வரி சூத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சூத்திரம் அமைச்சரவை அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் பொருளாதாரத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் சிகரெட்டின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய முறைமைக்கு சிகரெட்டின் விலையை அதிகரிப்பதே இந்த வரி சூத்திரத்தின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கொரோனாவுக்கு...

9 ஆண்களும் 9 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்தனர். இதனால் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 962 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## சீன வெளியுறவு...

சீன தூதரகம் நேற்று உறுதிப்படுத்தியது.

சீன - இலங்கை இராஜதந்திர தொடர்பின் 65 வருட பூர்த்திக் கொண்டாட்டம் வெளிவிவகார அமைச்சரின் வருகையுடன் ஆரம்பமாகின்றது என்று தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வருடத்தில் அவரின் முதலாவது வெளிநாட்டு பயணத்தின் இறுதி இடமாக இலங்கை அமைந்துள்ளதாகவும் சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## சீனாவுக்கு...

ரத்தில் இந்தியா தனக்கு நீண்ட கால சகா ஒருவர் தேவை என கருதினால் இந்தியா தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பத்து பில்லியன் அமெரிக்க டொலர்களை( ஒத்திவைக்கப்பட்ட வட்டி) கடனாக வழங்கவேண்டும், அல்லது சீனாவிற்கு இளைய சகா ஒருவர் கிடைக்கும் நிலையை எதிர்கொள்ளவேண்டும்.

மோடி அரசாங்கம் பல வெளிவிவகார கொள்கைகளில் தோல்வியடைந்துள்ளது இலங்கை இன்னொன்றாக இருக்கவேண்டாம்" என அவர் நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்துக்கு ஜன. 3 இல் மூடுவிழா

## டொலர் நெருக்கடியே காரணம் என்கிறார் அமைச்சர்



**கொழும்பு, டிசெ. 31**

**சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் 2022 ஜனவரி 03 ஆம் திகதி முதல் மீண்டும் மூடப்படவுள்ளது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

மசகு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு டொலர் தட்டுப்பாடு நிலவுவதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். இதன்படி ஜனவரி 03 ஆம் திகதி முதல் ஜனவரி 30 ஆம் திகதிவரை குறித்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருக்கும்.

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டாலும், நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது எனவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் குறிப்பிட்டார். (இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1935



மறைவு 24 . 12 . 2021

### திருமதி திரேசா மரியநாயகம்

**(இளைப்பாறிய ஆசிரியை - திருக்குடும்ப கன்னியர் பாடசாலை - அனுராதபுரம், நல்லாயன் பாடசாலை - கொட்டாஞ்சேனை கொழும்பு, புனித றோக் பாடசாலை- யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திரேசா மரியநாயகம் அவர்கள் 24.12.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன்சிங்கராயர் - மரியசலோமை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியா பேதுருப்பிள்ளை பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மருமகளும், பேதுருப்பிள்ளை மரியநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், Dr. மொறின் சியாமளின் ஜெயராஜா (அவுஸ்திரேலியா), ஜெராட் ரவி மரியநாயகம் (லண்டன்), லெனட் சுரேஷ் மரியநாயகம்(கனடா), யூலியா ஜெஸ்மின் ஜேசுதாசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான யூலியானா அல்வீனஸ் (இளைப்பாறிய ஆசிரியை யாழ்ப்பாணம்), கைடி பொன்கலன்- இளைப்பாறிய அதிபர் புனித வளனார் கல்லூரி- திருகோணமலை), தார்சியஸ்(இளைப்பாறிய அதிபர் OLR - யாழ்ப்பாணம்), மேரியோசேப் குணரெத்தினம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் கல்வி திணைக்களம்- மன்னார்), மற்றும் லூர்த்தம்மா (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. இம்மானுவேல் ஜெயராஜா (அவுஸ்திரேலியா), அவ்றில் மரியநாயகம்(லண்டன்), டறீனா மரியநாயகம்(கனடா), Dr. புறூனோ யேசுதாசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,யூட், யஸ்ரின், கிறகர், ஒலிவியா, நிருஷா, யோபன், ஏட்றியன், ஜொனாத்தன், றேச்சல் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், அமிர்தநாயகம் இராசநாயகம் (கொழும்பு), லூர்து நாயகம் (ஐக்கிய அமெரிக்கா), மேரி றெஜினா(கொழும்பு), றோஸ்மேரி(கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணியும், Fr. நிருபன்(ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**லெனட் சுரேஸ் மரியநாயகம் - மகன்**
Mobile : +16478364643

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 228 பேர் குணமடைவு

*கொழும்பு, டிசெ. 31*

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 228 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 60 ஆயிரத்து 313 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# பால் தேநீரை இடைநிறுத்தத் திட்டம்

*கொழும்பு, டிசெ. 31*

பால் மா விலை அதிகரிப்பு காரணமாக பால் தேநீர் விற்பனையை இடைநிறுத்துவதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

உணவகங்களில் ரின் பாலைப் பயன்படுத்தி பால் தேநீர் தயாரிக்க உத்தேசித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

பால் மாவின் விலை மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், ஒரு கோப்பை பால் தேநீரின் விலையும் அதிகரிக்கப்பட்டால் பொதுமக்களுக்கு மேலும் சுமை ஏற்படும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சம்பத் கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால் மா பொதியின் விலையை 150 ரூபாயாலும், 400 கிராம் பொதியின் விலையை 60 ரூபாயாலும் உயர்த்துவதற்கு பால்மா இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளனர். (இ)

# புத்தளத்தில் கிணற்றிலிருந்து 15 வயது சிறுமி சடலமாக மீட்பு!

*புத்தளம், டிசெ. 31*

புத்தளத்தில் சிறுமி ஒருவ ரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவலகஸ்வெள, சியம்ப லேவ கிராமத்தில் 15 வயதுடைய சிறுமியின் சடலமே அவரின் வீட்டிலுள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட் டுள்ளது.

கருவலகஸ்வெள, டீ.எஸ்.சேனாநாயக்க வித்தியாலத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய் கூலிவேலை செய்து சம்பாதித்த பணத்தில் சிறு மியின் கல்வி நடவடிக்காக கையடக்கத் தொலைபேசி ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தச் சிறுமி கருவல கஸ்வெள பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனுடன் காதல் தொடர்பு வைத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞருடன் கடந்த இரு நாட்களாக தொலைபேசியில் தகவல்கள் பரிமாற்றிக் கொண்டுள்ளார். அதன் பின்னர் ஏதோ ஒரு விட யம் தொடர்பில் மன ரீதியான பாதிப்புக்குள்ளாகியிருந்தார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# சிறைக் கைதிக்கு கொண்டுவரப்பட்ட உணவுப் பொதிக்குள் ஹெரோயின்!

*காலி, டிசெ. 31*

சிறைச்சாலைக் கைதிக்குக் கொண்டுவரப்பட்ட உணவுப் பொதிக்குள் இருந்து 4 பைக்கற் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காலி சிறைச்சாலையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ஒருவருக்கு, அவரின் உறவினர் ஒருவரால் சோறு பார்சல் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதனை சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட்ட போது, உணவு பொதிக்குள் 4 பைக்கற் போதைப்பொருள் இருந்துள்ளது. அது ஹெரோயின் போதைப்பொருளாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. போதைப்பொருள் கொண்டு வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

# சீமெந்து தரையில் சறுக்கி விழுந்து இளம் கர்ப்பவதிப் பெண் உயிரிழப்பு

*திருகோணமலை, டிசெ. 31*

வீட்டில் சீமெந்து தரையில் சறுக்கி விழுந்து மயக்கமுற்ற கர்ப்பிணிப் பெண் ஒருவர் உயிரிழந்தார். திருகோணமலை, தோப்பூர் - சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த நிரஞ்சலராசா சரணிகா எனும் 19 வயதுடைய கர்ப்பவதி பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார்.

குறித்த பெண் சமயலறைக் குச் சென்று தண்ணீரை எடுத்து வரும்போது வீட்டின் வரவேற்பு அறையில் சறுக்கி விழுந்து மயக்கமடைந்தார்.

பின்னர் உறவினர்கள் அவரைத் தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடையில் உயிரிழந்தார். (இ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு
**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கத்திசண்டை,கத்தி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்